


ISSN: 2582–5518

புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




சனி ❖ மார்ச். 02, 2024 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 144 ❖ ரூ.10

## பெங்களூரு 'ராமேஸ்வரம் கஃபே'யில் நிகழ்ந்தது குண்டுவெடிப்புதான்

# உறுதி

## குறைந்த தீவிரம் கொண்ட வெடிகுண்டு வெடித்திருக்கிறது. வாடிக்கையாளர் ஒருவரின் பையில் இந்த வெடிகுண்டு வைக்கப்பட்டிருந்துள்ளது ;கர்நாடக முதல்வர்




பெங்களூரு , மார். 2-

பெங்களூருவில் உள்ள ராமேஸ்வரம் கஃபே உணவகத்தில் வெடித்தது குறைந்த தீவிரம் கொண்ட வெடிகுண்டு என்று கர்நாடக முதல்வர் சித்தராமையா உறுதிப்படுத்தி உள்ளார்.

பெங்களூரு குண்டனஹல்லி பகுதியில் உள்ள பிரபல உணவகமான ராமேஸ்வர கஃபேவில் நேற்று (வெள்ளிக்கிழமை) மதியம் 1 மணி அளவில் பயங்கர வெடிப்புச் சத்தம் கேட்டது. சுற்றியிருந்தவர்கள் சென்று பார்த்தபோது உணவகத்தின் முகப்புப் பக்கம்சேதமடைந்ததோடு உள்ளே தீ பற்றி எரிந்து கொண்டிருந்தது. உணவகத்தில் இருந்தவர்கள் சிலர் காயமடைந்திருந்தனர். காயமடைந்தவர்கள் ப்ரூக்ஃபீல்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் பற்றிய தகவல் கிடைத்ததும் பெங்களூரு ஒயிட்ஃபீல்டு காவல் துறையினர் விரைந்து சென்றனர். தீயணைப்பு வாகனங்கள் விரைந்து வரவழைக்கப்பட்டு தீ அணைக்கப்பட்டது. இந்தச் சம்பவத்தில் உணவகத்தில் இருந்த ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் என 9 பேர் காயமடைந்துள்ளனர்.

சிலிண்டர் வெடித்து தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என தொடக்கத்தில் ஊடகங்களில் செய்தி வெளியானது. உணவகத்தில் திடீரென ஏற்படும் வெடிப்பு அடங்கிய காட்சிகள் இணையத்தில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது.

இதனையடுத்து, பெங்களூருதெற்கு பாஜக எம்.பி. தேஜஸ்வி சூர்யா எக்ஸ் தளத்தில் பகிர்ந்த பதிவில், "ராமேஸ்வரம் கஃபே உரிமையாளரிடம் நான் தொலைபேசியில் பேசினேன். வாடிக்கையாளர் ஒருவர் விட்டுச் சென்ற கைப்பையில் இருந்துதான் ஏதோ வெடித்துள்ளது. சிலிண்டர் ஏதும் வெடிக்கவில்லை என்றார். இது ஏதோ குண்டுவெடிப்பு போலவே உள்ளது. பெங்களூரு மக்களுக்கு முதல்வர் சித்தராமையா தெளிவான பதிலைத் தர வேண்டும்" என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், மைசூருவில் செய்தியாளர்களிடம் பேசிய முதல்வர் சித்தராமையா, "ராமேஸ்வரம் கஃபேவில் நிகழ்ந்தது குண்டுவெடிப்புதான். குறைந்த தீவிரம் கொண்ட வெடிகுண்டு வெடித்திருக்கிறது. வாடிக்கையாளர் ஒருவரின் பையில் இந்த வெடிகுண்டு வைக்கப் பட்டிருந்துள்ளது. சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்ததில் இது தெரிய வந்துள்ளது.

இதையார் வெடிக்கச் செய்தார்கள் என்பது தெரியவில்லை. சம்பவம் நடந்த இடத்துக்கு காவல் துறையினர் விரைந்து சென்று விசாரணை நடத்தி வருகிறார்கள். நிலைமை குறித்து ஆய்வு செய்யுமாறு உள்துறை அமைச்சரை நான் கேட்டுக்கொண்டேன்" என்று அவர் தெரிவித்துள்ளார். இந்த சம்பவம் பெங்களூரு குண்டனஹல்லி பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.




▶ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நேற்று (1.3.2024) தனது 71-வது பிறந்தநாளையொட்டி, சென்னை, அண்ணா அறிவாலயத்தில், அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள் முன்னாள் உறுப்பினர்கள்,திமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களுடன் கேக் வெட்டி கொண்டாடினார்.

## மக்களவைத் தேர்தலுக்கான பாஜக முதல்கட்ட வேட்பாளர்கள் பட்டியல் : பிரதமர் மோடி முக்கிய ஆலோசனை




புதுடெல்லி, மார். 2-

வரவிருக்கும் மக்களவைத் தேர்தலுக்கான பாஜக முதல்கட்ட வேட்பாளர்கள் பட்டியலை இறுதி செய்வது தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் முக்கிய ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. இதற்காக, பிரதமர் மோடி தலைமையில் பாஜக மத்திய தேர்தல் குழு கூட்டம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பின்னிரவில் நடைபெற்றது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மக்களவைத் தேர்தலுக்கான பாஜக முதல்கட்ட வேட்பாளர்கள் பட்டியலைஇறுதிசெய்வது தொடர்பாக விரிவாக விவாதிக்கப்பட்டதாகத் தெரிகிறது. பின்னிரவு 10.30 மணிக்குத் தொடங்கிய இந்த ஆலோசனை 4 மணி நேரத்துக்கும் மேலாக நடைபெற்றதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பாஜக தேசியத் தலைவர் ஜெபி நட்டா, மத்திய அமைச்சர் அமித் ஷா, ராஜ்நாத் சிங், உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத், மகாராஷ்டிரா துணை முதல்வர் தேவேந்திர பட்நாவிஸ், குஜராத் முதல்வர் பூபேந்திர படேல், மத்தியப் பிரதேச முதல்வர் மோகன் யாதவ், சத்தீஸ்கர் முதல்வர் விஷ்ணு தியோ சாய், உத்தராகண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமி, கோவா முதல்வர் பிரமோத் சாவந்த் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

மக்களவைத் தேர்தலுக்கான தேதிகளை இந்திய தலைமைத் தேர்தல் ஆணையம் அறிவிப்பதற்கு முன்னதாகவே பாஜக தனது முதற்கட்ட வேட்பாளர் பட்டியலை வெளியிட ஆயத்தமாகி வருவதாகக் கூறப்படுகிறது. இந்தச் சூழலிலேயே நேற்றைய ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றதாகவும் தெரிகிறது.

அதுவும் குறிப்பாக, மக்களவைத் தேர்தல் தேதிகள் அறிவிக்கப்படும் முன்னதாக உத்தரப் பிரதேசத்தில் தனது செல்வாக்கு குறைந்த மக்களவைத் தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் பட்டியலை முதலில் வெளியிட பாஜக திட்டமிட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, கட்சியின் தேசியத் தலைவர் நட்டா, உபி முதல்வர் யோகி ஆதித்யநாத் ஆகியோர் பாஜகவுக்கு சாதகமற்ற தொகுதிகள் பற்றி ஆலோசனை நடத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பாஜக வேட்பாளர்கள் பட்டியல் எப்போதுமே கவனம் பெறும். காரணம். ஏனெனில், அதன் பட்டியலில் தெரிந்த பிரபலமான முகங்களைக் கூட கைவிட்டுவிட்டு புதிய முகங்களுக்கு வாய்ப்பு கொடுப்பது என்பது சாதாரணமாக நடந்துவிடும். அதனால் மக்களவைத் தேர்தல் 2024-க்கான பாஜகவின் முதல் வேட்பாளர் பட்டியல் எதிர்பார்ப்பைப் பெற்றுள்ளது.

மக்களவைத் தேர்தலுக்கான அறிவிப்பு மார்ச் 2வது வாரத்தில் வெளியிடப்பட்டு தேர்தல் ஏப்ரல் 2வது வாரம் தொடங்கி நடத்தப்படலாம் என ஊகங்கள் நிலவுகின்றன.



▶ புதுக்கோட்டை நகராட்சி, சந்தைபேட்டை அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி தேர்வு மையத்தில்,பிளஸ் 2 பொதுத் தேர்வுகள் நடைபெறுவதை, மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா,நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மஞ்சுளா, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் ஐஸ்வர்யா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.




▶ திருவள்ளூரில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலைஞர் விளையாட்டு உபகரணங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கைத்தறி மற்றும் துணி நூல்துறை அமைச்சர் காந்தி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்ய மிஸ்ரா, சட்டமன்ற உறுப்பினர்கள் சுதர்சனம், நாசர்,கிருஷ்ணசாமி, கோவிந்தராஜன்,இராஜேந்திரன்,சந்திரன்,துரை சந்திரசேகர், மாவட்ட ஆட்சித் தலைவர் பிரபுசங்கர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாதரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### வருமானத்துக்கு அதிகமாக சொத்து குவிப்பு வழக்கு

## கள்ளக்குறிச்சி அதிமுக முன்னாள் எம்எல்ஏ பிரபு வீட்டில் லஞ்ச ஒழிப்பு போலீஸார் சோதனை: ஈபிஎஸ் கண்டனம்



கள்ளக்குறிச்சி : மார். 2, கள்ளக்குறிச்சி அதிமுக முன்னாள் எம்எல்ஏ பிரபு வீட்டில் லஞ்ச ஒழிப்பு போலீஸார் நேற்று அதிகாலை முதல் சோதனை நடைபெற்றது.

தமிழ்நாட்டில் முன்னாள் மற்றும் இந்நாள் எம்எல்ஏக்கள் மற்றும் அமைச்சர்கள் பலர் மீதுசொத்துக்குவிப்பு வழக்குகள் நிலுவையில் உள்ளது. இந்நிலையில் நேற்று காலை கள்ளக்குறிச்சி அதிமுக முன்னாள் எம்.எல்.ஏ பிரபு, அவரது அப்பா ஐயப்பா, விழுப்புரத்தில் உள்ள அவரது சகோதரி வசந்தி ஆகியோருக்கு சொந்தமான இடங்களில் லஞ்சஒழிப்புத்துறையினர் சோதனை நடத்தினர். சில நாட்களுக்கு முன் பண்ருட்டி முன்னாள் அதிமுக எம்எல்ஏ சத்யா பன்னீர்செல்வம் வீட்டில் லஞ்ச ஒழிப்புத் துறை சோதனை நடத்தியுள்ள நிலையில், தற்போது பிரபு வீட்டிலும் அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

முன்னாள் அதிமுக எம்எல்ஏ பிரபுவுக்கு நெருக்கமாக உள்ளவர்களின் 9 இடங்களில்லஞ்சஒழிப்புத் துறை அதிகாரிகள் சோதனை செய்தனர். பத்து ரூபாய் இயக்கம் கள்ளக்குறிச்சி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஓம் பிரகாஷ் சென்னை உயர் நீதிமன்றத்தில் கள்ளக்குறிச்சி முன்னாள் எம்எல்ஏ பிரபு வருமானத்துக்கு அதிகமாக சொத்து குவித்துள்ளார் என்று வழக்குதொடர்ந்திருந்தார். இந்த வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவுபடி நேற்று சோதனை நடைபெற்றது. முன்னாள் எம்எல்ஏ பிரபு அதிமுகவிலிருந்து விலகி அமமுகவில் இணைந்து, மீண்டும் அதிமுகவில் இணைந்தவர் என்பது குறிப்பிடதக்கது.

இந்நிலையில், அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி இது குறித்து தனது எக்ஸ் தளத்தில், "கள்ளக்குறிச்சி தொகுதி கழக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பிரபு மீது, அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, பழிவாங்கும் எண்ணத்தோடு லஞ்ச ஒழிப்புத் துறையை ஏவிவிட்டு சோதனை மேற்கொண்டிருக்கும் விடியா திமுக அரசின் இச்செயலுக்கு எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

## "தமிழகத்தை போதைப் பொருள் கடத்தல்காரர்களின் புகலிடமாக மாற்றியதற்காக முதல்வர் வெட்கித் தலைகுனிய வேண்டும்"

### அண்ணாமலை விமர்சனம்

சென்னை : மார். 2-

"தமிழகம் முழுமையாக இந்தியாவின் போதைப்பொருள் தலைநகரமாக மாறியிருக்கிறது. போதைப் பொருள் கடத்தல்காரர்களின் புகலிடமாக நமது மாநிலத்தை மாற்றியதற்காக மு.க.ஸ்டாலின் வெட்கித் தலைகுனிய வேண்டும்" என்று பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை விமர்சித்துள்ளார்.

இது தொடர்பாக அண்ணாமலை தனது எக்ஸ் பதிவில், "தமிழகம் முழுமையாக இந்தியாவின் போதைப்பொருள் தலைநகரமாக மாறியிருக்கிறது. போதைப்பொருள் கடத்தல்காரர்களின் புகலிடமாக, நமது மாநிலத்தை மாற்றியதற்காக மு.க.ஸ்டாலின் வெட்கித் தலைகுனிய வேண்டும். சர்வதேச போதைப் பொருள் கடத்தல் கூட்டத்தின் தலைவனும், திமுக (முன்னாள்) நிர்வாகியுமான ஜாபர் சாதிக்என்பவர்ஓடிஒளிந்து கொண்டிருக்கிறார்.

திமுக நிர்வாகிகளின் நிறுவனங்களில் தேசிய போதைப் பொருள் கட்டுப்பாட்டு ஆணையம் சோதனை நடத்தி வருகிறது. தமிழகத்துக்குக் கடத்தப்படவிருந்த ரூ.1200 கோடி மதிப்புள்ள போதைப் பொருள்கள் குஜராத் கடற்பகுதியிலும், நேற்று ரயிலில் கடத்தப்பட்ட 30 கிலோ மெத்தம்பேட்டமைன் போதைப் பொருள், நுண்ணறிவுத் துறையால் மதுரையிலும் கைப்பற்றப்பட்டுள்ளது.



திமுக நிர்வாகி ஜாபர் சாதிக்கின் போதைப் பொருள் கடத்தல் தொடர்புகள் அம்பலமாகிக் கொண்டிருக்கும் வேளையில் மு.க.ஸ்டாலின் இது குறித்து வாயே திறக்காமல் இருக்கிறார். இனிமேலாவது அவர் விழித்தெழுந்து நடவடிக்கை எடுப்பாரா அல்லது வழக்கம்போல மக்களின் கவனத்தை இதிலிருந்து முக்கியமற்ற பிரச்சினைகளுக்குத் திசைதிருப்ப, தனது கூட்டத்தை பயன்படுத்தப் போகிறாரா?" என்று பதிவிட்டுள்ளார்.

# இன்று

## 2-3-2024

எழுமாத்தூர் கனகாசல குமரன் கோயில் – வீட்டில் பொன்னும் பொருளும் சேரும்.
சக வருடம் 1945 பால்குன 12

| சோபகிருது மாசி 19 | MAR - SAT சனி | ஷஃபான் 20 | இராசிபலன் |
|---|---|---|---|
| | | தேய்பிறை 062 / 304 | |

தேய். ஸப்தமி 55.09 (கா. 04.32) விசாகம் 11.55 (கா. 11.14) தியாஜ் 22.01 சித்த. திருவள்ளூர் ஸ்ரீவீரராகவப் பெருமாள், காஞ்சிபுரம் ஸ்ரீவரதராஜப் பெருமாள், மதுரை ஸ்ரீகூடலழகர் இத்தலங்களில் திருமஞ்சன சேவை. ஆழ்வார் திருநகரில் ஸ்ரீநம்மாழ்வார் புறப்பாடு. பெரிய நகக.

| | நல்லநேரம் | கௌரி.நல்ல | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை: | 7.30-8.30 | 10.30-11.30 | 09.00 | 06.00 | 01.30 |
| மாலை: | 5.00-6.00 | 9.30-10.30 | 10.30 | 07.30 | 03.00 |

சூலம்: கிழக்கு; பரிகாரம்: தயிர்; கும்ப லக்கனம் இருப்பு நா. 1 வி. 54; சந்திராஷ்டமம்: ரேவதி அசுபதி; கரணம்: 12-1.30; சூரிய உதயம்: 6.28

செருப்பின் அருமை வெயிலில் தெரியும்.

இராசிபலன்: மேஷம் - நிறைவு; ரிஷபம் - நேர்மை; மிதுனம் - ஆர்வம்; கடகம் - பரிவு; சிம்மம் - புகழ்; கன்னி - ஜெயம்; துலாம் - துன்பம்; விருச்சி - ஓய்வு; தனுசு - பக்தி; மகரம் - சலனம்; கும்பம் - கவனம்; மீனம் - ஆய்வு

## சிந்திப்போம்.... செயல்படுவோம்

“உங்களுக்குள் நீங்கள் நல்ல சமநிலையுடன் இருக்கும்போது மட்டும்தான், உங்கள் புத்திசாலித்தனம், திறமை மற்றும் ஆற்றல் முழுமையாக வெளிப்படும்.”




# முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்திற்கு எதிரான சொத்து குவிப்பு வழக்கு விசாரணைக்கு தடைவிதிக்க உச்சநீதிமன்றம் மறுப்பு



டெல்லி : மார். 2–

ஓபிஎஸ்-க்கு எதிரான சொத்து குவிப்பு வழக்கு விசாரணைக்கு தடைவிதிக்க உச்சநீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது.

கடந்த 2001-2006ம் ஆண்டு காலகட்டத்தில் மறைந்த முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான அமைச்சரவையில் வருவாய்த்துறை அமைச்சராக பதவி வகித்தபோது வருமானத்துக்கு அதிகமாக ரூ.1.77 கோடி அளவிற்கு சொத்துக்களை குவித்தாக 2006ம் ஆண்டு லஞ்ச ஒழிப்புத்துறை ஓ.பன்னீர்செல்வத்துக்கு எதிராக வழக்கை பதிவு செய்தது.

இந்த வழக்கு மதுரை நீதிமன்றத்தில் இருந்து சிவகங்கை நீதிமன்றத்துக்கு மாற்றி 2017ம் ஆண்டு உயர்நீதிமன்ற மதுரைக்கிளை உத்தரவிட்டது. மீண்டும் அதிமுக ஆட்சி பொறுப்பேற்றவுடன் இந்த வழக்கு தொடர்வதற்கான அனுமதியை திரும்பப்பெற்று தமிழக அரசு உத்தரவு பிறப்பித்தது. இதையடுத்து இந்த உத்தரவை ஏற்று நீதிமன்றம் ஓ.பன்னீர்செல்வத்தை விடுவித்து உத்தரவிட்டது. இந்த உத்தரவை மறுஆய்வு செய்வதற்காக சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் தாமாக முன்வந்து கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் விசாரணைக்கு எடுத்துள்ளார்.

இந்நிலையில், தனக்கு எதிரான சொத்துகுவிப்பு வழக்குக்கு தடை கோரி முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் தாக்கல் செய்த மேல்முறையீடு மனுவை உச்சநீதிமன்ற நீதிபதிகள் ரிஷிகேஷ் ராய், பிரசன் குமார் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது ஓபிஎஸ் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் முன்னாள் அமைச்சர் வளர்மதி விவகாரத்தில் உள்ள அனைத்து அம்சங்களும் இந்த வழக்கில் பொருந்தும் என வாதிட்டார். ஆனால் அதனை ஏற்க உச்சநீதிமன்றம் மறுத்துவிட்டது. மனுதாரர் முன்னாள் முதல்வர் தற்போது எந்த அதிகாரத்திலும் இல்லை என்றும், முன்னாள் அமைச்சர் வளர்மதி விவகாரத்தில் தெரிவிக்கப்பட்ட அம்சங்கள் இந்த வழக்கில் எப்படி பொருந்தும்? என்றும் நீதிபதிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

மேலும், இந்த விவகாரத்தில் தனி நீதிபதி தெரிவித்த கருத்துக்களை கருத்தில் கொள்ளாமல் வழக்கை விசாரிக்க வேண்டுமென்றும், இதற்கு தடை விதிக்க முடியாது என்றும் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் தாக்கல் செய்த மனுவை திரும்பப்பெற அனுமதி அளித்து தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளனர். இதன்மூலம் ஓபிஎஸ் மீதான சொத்துகுவிப்பு வழக்கு தொடர்ந்து சென்னை உயர்நீதிமன்றத்தில் நடைபெறும் என்பது தெளிவாகிறது.

# “80 தொகுதிகளிலும் தோற்கடிப்பீர், பாஜகவை அகற்றுவீர்” – உ.பி.யில் அகிலேஷ் முன்வைக்கும் முழக்கம்



புதுடெல்லி : மார். 2–

உத்தரப் பிரதேசத்தில் மொத்தமுள்ள 80 தொகுதிகளிலும் பாஜகவை தோற்கடியுங்கள்; அக்கட்சியை அகற்றுங்கள் எனும் கோஷத்தை சமாஜ்வாதி கட்சித் தொண்டர்கள் கிராமம் கிராமமாகச் சென்று சேர்ப்பார்கள் என அக்கட்சியின் தலைவர் அகிலேஷ் யாதவ் தெரிவித்துள்ளார்.

உத்தரப் பிரதேச தலைநகர் லக்னோவில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர், "இந்தியா கூட்டணியை விரிவுபடுத்த சமாஜ்வாதி கட்சி தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. வரும் நாட்களில் உத்தரப் பிரதேசத்தில் பாஜகவை நாங்கள் துடைத்தெறிவோம். எங்களுக்கு அந்த நம்பிக்கை இருக்கிறது.

எங்கள் கட்சியின் தலைவர்களும் தொண்டர்களும், '80 ஹரோ, பிஜேபி ஹட்டாவோ' (80 தொகுதிகளிலும் தோற்கடிப்பீர்; பாஜகவை அகற்றுவீர்) எனும் கோஷத்தை கிராமம் கிராமமாகச் சென்று மக்களிடம் சேர்ப்பார்கள். பாஜக விவசாயிகளுக்கு எதிராக செயல்பட்டு வருகிறது. விவசாயிகளை தொடர்ந்து வஞ்சிக்கிறது" எனக் குறிப்பிட்டார்.

உத்தரப் பிரதேசத்தின் பிரதான எதிர்க்கட்சியான சமாஜ்வாதி கட்சி, இந்தியா கூட்டணியின் முக்கிய கட்சியாக உள்ளது. வரும் மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு சமாஜ்வாதி கட்சி ரேபரேலி, அமேதி, கான்பூர், சஹரன்பூர், ஃபதேபூர் சிக்ரி, வாரணாசி, பாராபங்கி, சீதாபூர், காசியாபாத், ஜான்சி, மகாராஜ்கஞ்ச், தியோரியா, அலகாபாத், புலந்த்ஷர், மதுரா, அம்ரோஹா, பன்ஸ்கோன் ஆகிய 17 தொகுதிகளை ஒதுக்கி உள்ளது. மீதமுள்ள 63 தொகுதிகளில் வேறு சில சிறிய கட்சிகளுடன் இணைந்து, தேர்தலை எதிர்கொள்ள சமாஜ்வாதி கட்சி திட்டமிட்டிருக்கிறது.

# காங்கிரஸ் எம்எல்ஏக்கள் அமளியால் ஆளுநர் திணறல் : பஞ்சாப் சட்டப் பேரவையில் பரபரப்பு



பஞ்சாப் : மார். 2–

பஞ்சாப் சட்டப்பேரவையில் விவசாயிகள் பிரச்சினையை எழுப்பி, ஆளுநர் உரையை வாசிக்க விடாமல் எதிர்க்கட்சியான காங்கிரஸ் எம்எல்ஏ-க்கள் அமளியில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

பஞ்சாப் சட்டப்பேரவையில் பட்ஜெட் கூட்டத் தொடர் நேற்று தொடங்கியது. அப்போது பேரவையில் அம்மாநில ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் தனது உரையை வாசிக்கத் தொடங்கினார். உடனடியாக, எதிர்க்கட்சியான காங்கிரஸ் எம்எல்ஏ-க்கள் எழுந்து, அவையில் விவசாயிகளின் பிரச்சினைகளை எழுப்பி கோஷம் போட்டனர். இந்த சலசலப்புக்கு மத்தியில், ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் தனது உரையிலிருந்து சில வரிகளை மட்டும் வாசித்தார். பின்னர் சலசலப்பு அதிகரித்ததால், மீதமுள்ளவற்றை வாசித்ததாக கருத வேண்டும் என கூறினார்.

பேரவையில், பஞ்சாப் காங்கிரஸ் தலைவர் அமரீந்தர் சிங் ராஜா வாரிங், பேசுகையில், "விவசாயிகளின் போராட்டத்தில், ஹரியாணா பாதுகாப்புப் படையினர், போலீஸார் தாக்குதலில் உயிரிழந்த இளம் விவசாயி சுப்கரன் சிங்குக்கு ஆளுநர் அஞ்சலிசெலுத்தினால் நன்றாக இருக்கும்" என்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் பிரதாப்சிங் பஜ்வா பேசுகையில், "பஞ்சாப் மாநிலத்துடனான எல்லையை ஹரியாணா சீல் வைத்துள்ளது. உங்களால் எங்கள் விவசாயிகளைப் பாதுகாக்க முடியவில்லை" என்றார். தொடர்ந்து, விவசாயிகளின் பிரச்சினைகளை முதலில் விவாதிக்க வேண்டும் என காங்கிரஸ் உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

இதற்குப் பதிலளித்த ஆளுநர் பன்வாரிலால், "அவை நிகழ்ச்சி நிரல் படி, இந்த விஷயங்களைப்பற்றி விவாதிக்க உங்களுக்கு போதுமான நேரம் இருக்கிறது. நான் எனது உரையை வாசிக்க வேண்டும். எனது உரைக்குப் பிறகு, நீங்கள் எந்தப் பிரச்சினையையும் எழுப்பலாம்” என்றார். விவசாயிகள் பிரச்சினையை முன்வைத்து, பஞ்சாப் பேரவையில் ஆளுநர் உரையை வாசிக்க விடாமல் காங்கிரஸ் முடக்கியது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட ரேஷன் கார்டு இல்லாதவர்களுக்கும் ரூ.6,000 வரவு



சென்னை : மார். 2–

மிக்ஜாம் புயல் நிவாரணமாக தமிழக அரசு அறிவித்த ரூ. 6,000 உதவித் தொகையைப் பெற விண்ணப்பித்த ரேஷன் கார்டு இல்லாதவர்களுக்கும் பணம் வரவு வைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு டிசம்பரில் பெய்த மிக்ஜாம் புயலால் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய 4 மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள குடும்பங்களுக்கு வெள்ள நிவாரணத் தொகையாக ரூ.6000 வழங்கப்படும் என அரசால் அறிவிக்கப்பட்டது. முதல்கட்டமாக ரேஷன் கார்டு உள்ளவர்களுக்கு நேரடியாக பணம் விநியோகம் செய்யப்பட்டது.

அதேநேரம் ரேஷன் கார்டு இல்லாதவர்களுக்கும் ரூ.6,000 வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி, சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய 4 மாவட்டங்களில் கடந்த ஆண்டு டிசம்பர் 17ம் தேதி முதல் ரேஷன் கடைகள் மூலம் 5.5 லட்சம் விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

இதில் சென்னையில் மட்டும் ரேஷன் கார்டு இல்லாத 4.90 லட்சம் பேர் நிவாரண தொகை கோரி விண்ணப்பித்துள்ளனர். அடுத்ததாக காஞ்சிபுரம் மாவட்டத்தில் 29 ஆயிரம் பேரும், திருவள்ளூர் மாவட்டத்தில் 22 ஆயிரம் விண்ணப்பங்களும், செங்கல்பட்டு மாவட்டத்தில் 14 ஆயிரம் விண்ணப்பங்களும் பெறப்பட்டன. விண்ணப்பித்த 5.5 லட்சம் பேரின் ஆவணங்கள் பரிசீலனையில் இருப்பதாக அரசு தரப்பிலிருந்து சொல்லப்பட்ட நிலையில், நேற்று விண்ணப்பித்தவர்களின் வங்கி கணக்கில் பணம் வரவு வைக்கப்பட்டுள்ளது.

ரூ.6000 பயனாளிகளின் வங்கி கணக்குகளில் வரவு வைக்கப்பட்டுள்ளது. எந்தவித முன்னறிவிப்பு இன்றி வரவு வைக்கப்பட்டுள்ளது. எத்தனை பேருக்கு வரவு வைக்கப்பட்டுள்ளது என்பது உள்ளிட்ட விவரங்கள் அரசு சார்பில் வெளியிடப்படவில்லை.

# “அதிமுக மீதான அச்சத்தாலும், தோல்வி பயத்தாலும் திமுக அவசர அவசரமாக தொகுதி பங்கீட்டை முடிக்கிறது”– ஜெயக்குமார்



சென்னை : மார். 2–

“அதிமுக மீதான அச்சத்தால் திமுக அவசர அவசரமாக தொகுதி பங்கீட்டை முடிக்கிறது. இது ஒரு தோல்வி பயம்தான். எந்தெந்த கட்சிகள் எங்கு செல்லும் என்பது இன்னும் பத்து நாட்களில் தெரியவரும். அதுவரை இடைவேளை” என அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் சென்னையில் செய்தியாளர்களிடத்தில் பேசுகையில், “அதிமுக மீதான அச்சத்தால் திமுக அவசர அவசரமாக தொகுதி பங்கீட்டை முடிக்கிறது. இது ஒரு தோல்வி பயம் தான். எந்தெந்த கட்சிகள் எங்கு செல்லும் என்பது இன்னும் பத்து நாட்களில் தெரியவரும். அதுவரை இடைவேளை. செல்வப்பெருந்தகையின் கருத்துக்களை பார்க்கும் போது, பிரேக்கிங் ஆகப் போவதாகதான் ஒரு தகவல் வெளியாகியுள்ளது. அதற்காக நாங்கள் யாரிடமும் சென்று கெஞ்சவில்லை.

எங்கள் தலைமையில் நல்ல கூட்டணி அமையும். அதற்கு இன்னும் காலம் இருக்கிறது. திமுக எங்களுக்கு பிடிக்காத அரசு, மக்கள் விரோத அரசு. தலைமைச் செயலகத்திலேயே வெடிகுண்டு வீசப் போகிறார்கள் என மிரட்டல் வந்திருக்கிறது. தமிழகத்தில் வெடிகுண்டு கலாச்சாரம், போதை கலாச்சாரங்கள் என சட்டம் ஒழுங்கு சீர் கெட்டுள்ளது. திமுக அரசு ஆளுகின்ற தமிழகம் மிக மோசமான மாநிலமாக இருக்கிறது.

மத்திய அரசின் நிதிலிருந்து ஒரு லட்சத்து 42 ஆயிரம் கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழகத்துக்கு கிடைத்திருக்கும் நிதி ரூ.7000 கோடி தான். ஆனால் உத்தரப் பிரதேசத்துக்கு 25 ஆயிரம் கோடிக்கும் அதிகமாக கொடுத்திருக்கிறார்கள். ஆனால் நமது மாநிலத்திலிருந்து பல லட்சம் கோடி, மத்திய அரசுக்கு நிதியாக செல்கிறது. ஆனால் நமக்கு கிடைத்ததோ யானை பசிக்கு சோளப்பொறி தான்.

இந்த அளவுக்கு ஒரு பெரிய துரோகத்தை மத்திய அரசு செய்யக் கூடாது. வரி பகிர்வில் தமிழ்நாட்டுக்கு மத்திய அரசு பாரபட்சம் காட்டுகிறது. வெண்ணெய் ஒரு கண்ணிலும், சுண்ணாம்பு ஒரு கண்ணிலும் என வடக்கு, தெற்கு வரி பகிர்வில் செயல்படுகிறது. வரி பகிர்வு என்பது சீரானதாக இருக்க வேண்டும். தமிழகத்தை வஞ்சிக்கின்ற ஆட்சியாக திமுக இருக்கிறது” என்றார்.

# பஞ்சாப்பில் ஆம் ஆத்மி கட்சி பிரமுகர் சுட்டுக்கொலை



கபுர்தலா : மார். 2–

பஞ்சாப்பில் ஆளும் ஆம் ஆத்மி கட்சி பிரமுகரை சுட்டுக்கொன்றுவிட்டு தப்பிச்சென்ற மர்ம நபர்கள் குறித்து போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

பஞ்சாப் மாநிலம், ஆம் ஆத்மி கட்சி பிரமுகர் குர்பிரீத் சிங் என்ற கோபி சோஹ்லா. இவர், நேற்று காலை வழக்கு விசாரணைக்காக கபுர்தலா மாவட்டம், சுல்தான்பூர் லோதியில் உள்ள நீதிமன்றத்துக்கு காரில் தனியாக சென்று கொண்டிருந்தார்.

குர்பிரீத் சிங், தர்ன் தரன் மாவட்டம், சிங் ஃபதேஹ்பாத் - கோயிந்த்வால் சாஹிப் இடையே உள்ள ரயில்வே கிராசிங்கை கடக்க முயன்றார். அப்போது, அவரைப் பின்தொடர்ந்து வந்த மர்ம நபர்கள், திடீரென துப்பாக்கியால், குர்பிரீத் சிங் மீது கண்மூடித்தனமாக சுட்டுவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டனர்.

இதில் குர்பிரீத் சிங் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இந்நிலையில் துப்பாக்கிச் சூடு குறித்து தகவல் அறிந்த, டிஎஸ்பி ரவிஷர் சிங் தலைமையிலான போலீஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றனர். பின்னர் உடலைக் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

அதைத் தொடர்ந்து தாக்குதல் நடத்தியவர்களைப் பிடிக்க, தனிப்படை அமைத்து போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்தச் சம்பவத்துக்கு முன் விரோதம் காரணமாக இருக்கலாமா என்ற கோணத்திலும் விசாரணை நடக்கிறது. பஞ்சாப்பில் ஆளும் ஆம் ஆத்மி கட்சி பிரமுகர் பட்டப் பகலில் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# “மீண்டும் பாஜக ஆட்சிக்கு வந்தால் காஸ் விலை ரூ.2,000 ஆக உயரும்” – மம்தா விமர்சனம்



ஜார்கிராம் : மார். 2–

மேற்கு வங்கத்தில் ஜார்கிராம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் மம்தா பானர்ஜி பேசுகையில், “வரும் மக்களவைத் தேர்தலில் பாஜக வெற்றி பெற்றால் காஸ் சிலிண்டர் விலை ரூ.1,500 முதல் ரூ.2,000 வரை உயரலாம். அதன்பிறகு நாம் விறகு அடுப்புக்குத்தான் செல்ல வேண்டும்” என்று குறிப்பிட்டுள்ளார்.

மக்களவைத் தேர்தல் நெருங்கி வருகிற நிலையில், அரசியல் கட்சிகள் பொதுக் கூட்டங்களை நடத்தி மக்களிடம் உரையாற்றி வருகின்றன. இந்நிலையில், மேற்கு வங்கம் மாநிலத்தில் நடைபெற்றுவரும் கூட்டங்களில் அம்மாநில முதல்வர் மம்தா பானர்ஜி, பாஜக தலைமையிலான மத்திய அரசின் செயல்பாடுகளை கடுமையாக விமர்சித்து வருகிறார். மத்திய அரசு ஆவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் ஏழ்மை நிலையில் உள்ள மக்களுக்கு வீடு கட்டித் தருகிறது. இத்திட்டத்தின் கீழ் மேற்கு வங்கத்துக்கு மத்திய அரசு நிலுவையை வழங்காமல் உள்ளது என்று மம்தா பானர்ஜி குற்றம் சாட்டியுள்ளார்.

இந்நிலையில் இது குறித்து சமீபத்திய கூட்டத்தில் பேசிய அவர், ஆவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் மேற்கு வங்க மாநிலத்துக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகையை ஏப்ரல் மாதத்துக்குள் மத்திய அரசு வழங்க வேண்டும். இல்லையென்றால், மே மாதம் முதல் எங்களது அரசே, 11 லட்சம் ஏழை மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும். நாங்கள் யாசகம் கேட்கவில்லை. எங்களுக்கான உரிமையைத்தான் கேட்கிறோம்” என்று தெரிவித்தார்.

# அதிமுக கூட்டணிக்காக பா.ஜ.க. தவம் கிடக்கிறது அதிமுக முன்னாள் அமைச்சர் கடம்பூர் ராஜு விமர்சனம்



*சென்னை : மார். 2, தற்போது வரை கூட்டணியில் சேர்க்க அதிமுகவுக்காக தவம் கிடக்கிறது பாஜக என்று அதிமுக முன்னாள் அமைச்சர் கடம்பூர் ராஜு தெரிவித்துள்ளார்.*

*அதிமுக பாஜக கட்சிகள் கடந்த சில காலமாகவே கூட்டணியில் இணைந்து பயணித்து வந்தது. கடந்த லோக்சபா தேர்தலில் இந்தக்கூட்டணி உருவான நிலையில், இரு கட்சிகளும் இணைந்தே பயணித்து வந்தனர். இடையே சில மோதல்கள் வந்தாலும் இரு கட்சிகளும் இணைந்தே பயணித்து வந்தன. இந்தச் சூழலில் தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை அதிமுக குறித்தும், அதன் முன்னாள் தலைவர்கள் குறித்தும் சர்ச்சைக்குரிய கருத்துக்களை பேசி வந்தார்.*

*இதில் கடுப்பான எடப்பாடி தரப்பு பாஜகவுடன் கூட்டணி இல்லை என அறிவித்துவிட்டது. அந்த நேரத்தில் பேசிய எடப்பாடி பழனிசாமி, “இனி பாஜகவுடன் எப்போதும் கூட்டணி கிடையாது” என்றார். இது பாஜக-வினரை கொதிப்படைய செய்தது. பிறகு எவ்வளவு முயற்சித்தும் அதிமுகவை கூட்டணிக்கு இழுக்க முடியாமல் தவிக்கிறது பாஜக என்கிறார்கள் அரசியல் பார்வையாளர்கள். சமீபத்தில் பேசிய உள்துறை அமைச்சர் அமித் ஷா, பாஜகவின் கூட்டணிக்கான கதவுகள் திறந்தே இருக்கிறது” என்று மறைமுகமாக அதிமுகவுக்கு விடும் தூது என பலரும் கருத்து தெரிவித்தனர்.*

*இந்நிலையில், தற்போது வரை கூட்டணியில் சேர்க்க அதிமுகவுக்காக தவம் கிடக்கிறது பாஜக என்று அதிமுக முன்னாள் அமைச்சர் கடம்பூர் ராஜு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது;*

*பாஜக வலுவாக இருந்தால் அதிமுகவுக்காக காத்திருக்க வேண்டிய அவசியம் என்ன? என்று கேள்வி எழுப்பியுள்ளார். பாஜகவின் வாக்கு விகிதம் அதிகரித்திருப்பதாக வரும் கணிப்புகள் எதுவும் உண்மை இல்லை. கூட்டணியில் அதிமுகவை சேர்க்க பாஜகவினர் ஆள் மேல் ஆள் அனுப்புகிறார்கள். அதிமுக பலமாக இருப்பதால் பாஜக எங்களுக்காக காத்திருக்கிறது; இல்லையெனில் ஏன் காத்திருக்க வேண்டும் என்று கடம்பூர் ராஜு கூறியுள்ளார்.*



**▶ வேலூர் மாவட்டம் தொரப்பாடியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு நடைபெறுவதை மாவட்ட ஆட்சித்தலைவர் வே. இரா. சுப்புலெட்சுமி, பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது முதன்மை கல்வி அலுவலர் மணிமொழி உடனிருந்தார்.**

# ஆரணி அறுபடை வீடு முருக பக்தர்கள் பேரவை சார்பில் சிறுவாபுரிக்கு பால்குடம் ஏந்தி ஊர்வலமாக சென்றனர்



ஊத்துக்கோட்டை, மார்2–

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஆரணி, தமிழர் காலனியில் அறுபடை வீடு முருக பக்தர்கள் பேரவை இயங்கி வருகிறது. இந்த முருக பக்தர்களின் சார்பில் 32-ம் ஆண்டாக பங்குனி உத்திரத் திருவிழா நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது. இம்மாதம் 25-ம் தேதி பங்குனி உத்திர திருவிழா நடைபெறுகிறது. இதை முன்னிட்டு கடந்த 25-ம் தேதி எல்லையம்மன் கிராம தேவிக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது.

கடந்த 28-ம் தேதி புதன்கிழமை காலை சிறுவாபுரி முருகனுக்கு செல்லும் பக்தர்களுக்கு காப்பு கட்டும் நிகழ்ச்சி நடைபெற்றது. பின்னர், கிராம கோவில்களுக்கு வாடை பொங்கல் மற்றும் அபிஷேகம் நடைபெற்றது. 29-ம் தேதி வியாழக்கிழமை இரவு சிறப்பு பதிபூஜை நடைபெற்றது. நேற்று காலை காப்பு கட்டி விரதம் இருந்த பக்தர்கள் பால்குடம் சுமந்தும், பால் காவடி, பன்னீர் காவடி, புஷ்பக் காவடி, கூண்டு காவடி, தேர் காவடி உள்ளிட்டவைகளுடன் ஆரணி தமிழர் காலனியில் இருந்து பம்பை-உடுக்கை முழங்க "முருகனுக்கு அரோகரா" "கந்தனுக்கு அரோகரா" என பயபக்தியுடன் கோஷம் எழுப்பிய வண்ணம் சிறுவாபுரி கோவிலுக்கு சென்றனர்.

பின்னர், இக்கோவிலில் சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது. இன்று மதியம் ஆரணி, தமிழர் காலனியில் மாபெரும் அன்னதான நிகழ்ச்சி நடைபெறுகிறது. நாளை இரவு பூக்களாலும், மின்விளக்குகலாலும் அலங்கரிக்கப்பட்ட அறுபடை முருகன் வானவேடிக்கையுடன் திருவீதி உலா வரும் நிகழ்ச்சியும், விளக்கு பூஜையும் நடைபெறுகிறது. திங்கட்கிழமை இரவு சிறப்பு பூஜை நடைபெறுகிறது. பின்னர், அறுபடை வீடு பக்தர்கள் யாத்திரை புறப்படும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை குருசாமிகள், அறுபடை வீடு முருக பக்தர்கள் பேரவை மற்றும் கிராம பொதுமக்கள் ஆகியோர் சிறப்பாக செய்துள்ளனர்.

02.03.2024 ❖ வரலாறு

# சென்னை திருவொற்றியூரில் சாலை விபத்தில் காயமடைந்த தம்பதியை மீட்டு தனது காரில் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்த திருவொற்றியூர் எம்எல்ஏ



சென்னை, மார். 2-

சென்னை எண்ணூர் காமராஜர் நகரைச் சேர்ந்த நாராயணன்(வயது 50) தனியார் நிறுவனத்தில் காவலாளியாக வேலை பார்த்து வருகிறார். இவரது மனைவி சீதாலட்சுமி (வயது 36) இவர்கள் இருவரும் நேற்று காலை இருசக்கர வாகனத்தில் ராயபுரத்தில் உள்ள கண் மருத்துவமனைக்கு இருசக்கர வாகனத்தில் எண்ணூர் விரைவு சாலையில் சென்று கொண்டிருந்தனர்.

அப்போது திருவொற்றியூர் குப்பம் அருகே சென்று கொண்டிருந்தபோது பின்னால் வந்த ஆட்டோ மோதியதில் கணவன் மனைவி இருவரும் கீழே விழுந்தனர் இதில் இரண்டு பேருக்கும் ரத்த காயங்களுடன் இருப்பதை பார்த்த பொதுமக்கள் 108 ஆம்புலன்ஸ் தகவல் தெரிவித்தனர்.

அப்போது அந்த வழியாக காரில் வந்த திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே. பி சங்கர் விபத்து ஏற்பட்டு கணவன் மனைவி காயம் அடைந்ததை பார்த்து உடனடியாக தனது காரை நிறுத்தி கணவன் மனைவி இருவரையும் மீட்டு உதவியாளர்களுடன் சேர்ந்து தூக்கி தனது காரில் ஏற்றி திருவொற்றியூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு கொண்டு சேர்த்தார்.

விபத்தில் சிக்கிய கணவன் மனைவியை தனது காரில் ஏற்றி உடனடியாக மருத்துவமனையில் கொண்டு சேர்த்த எம். எல். ஏ வுக்கு அப்பகுதி பொதுமக்கள் பாராட்டு தெரிவித்தனர்

# ஆரணி பேரூர் திமுக சார்பில் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு கட்சி கொடியை ஏற்றி வைத்து அன்னதானம் வழங்கல்





ஊத்துக்கோட்டை,மார்2-

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம்,ஆரணி பேரூர் திமுக சார்பில் தமிழக முதல்வரும்,திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் 71-வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு ஆரணி பஸ் நிறுத்தம் அருகே உள்ள பேரறிஞர் அண்ணாவின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

பின்னர்,கட்சி கொடியை ஏற்றி வைத்தனர். இதேபோல்,இப்பேரூராட்சியில் உள்ள 15 வார்டுகளிலும் கட்சி கொடியை ஏற்றி வைத்து,பொதுமக்களுக்கு இனிப்பு மற்றும் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிகளுக்கு,பேரூர் செயலாளர் பி.முத்து தலைமை தாங்கினார்.அவைத் தலைவர் வக்கீல் ரமேஷ், பொருளாளர் கு.கரிகாலன்,பேரூர் துணை செயலாளர் கோபிநாத்,நிலவழகன், கலையரசி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளர்களாக முன்னாள் பேரூர் செயலாளர்கள் டி.கண்ணதாசன், ஜி.பி. வெங்கடேசன்,மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் ஆரணி எஸ். ரோஸ்பொன்னையன்,டி. எஸ் குருவப்பா ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சிகளில், பேரூராட்சிமன்ற உறுப்பினர் ரகுமான்கான்,பாலகுருவப்பா, தமிழழகன், ஆர்.ரவி, கௌசல்யாதினேஷ், மகேந்திரன்,நாகராஜ்,சீனு, வெங்கடேசன்,முரளி, உதயகுமார், சுந்தர், சத்யநாராயணன், வக்கீல்கள் கவியரசு, சுரேந்தர்,சாய் சத்யா, பாஸ்கர், உமாபதி, சுல்தான், மணி, சேகர் ஞானபிரகாசம், ஆறுமுகம், பார்த்திபன், தமிழ்செல்வன், முத்து, சங்கர், சிராஜுதீன், பாஸ்கர், சந்தோஷ்பிரபா, ஜடிஜெகன், ஓவியர் பன்னீர்செல்வம், வக்கீல் ஜெகநாதன், வெங்கட், டான்சர் குமார், வேலு,ஈசா ஜாவித், தயாளன்,சரளம்மாள், சின்னப்பொண்ண, ராமு, முருகன்,வடிவேலு,சுந்தர்ராஜ், பன்னீர்,வனம்மா,ரமேஷ், ஜெயா,இளங்கோவன், திலகராஜ்,பிரபாகரன்,விஜயா, ராஜேஷ்,பூண்டு சரவணன், செங்கல்வராயன்,சந்திரன், சந்துரு,வினோத்குமார், கௌரிசங்கர்,ஷியாம்குமார், பாபு, வி.கே.எம். விஜயகுமார்,நீலகண்டன்,எஸ். ஈஸ்வரகுமார் உள்ளிட்ட மாவட்ட,ஒன்றிய, பேரூர்,கிளைக்கழக நிர்வாகிகள்,அணிகளின் அமைப்பாளர்கள்,உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் 1000 பேருக்கு பிரியாணி வழங்கினர்



சென்னை, மார்,2

சென்னை திருவெற்றியூர் விம்கோ மெட்ரோ ரயில் நிலையம் மற்றும் திருவொற்றியூர் சத்திய மூர்த்தி நகர் பகுதிகளில் திமுக கழக மாநில மீனவர் அணி மற்றும் திருவொற்றியூர் தொகுதி திமுக சார்பில் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் 71 வது பிறந்த நாளை முன்னிட்டு ஆயிரம் பேருக்கு பிரியாணி வழங்கப்பட்டது.

இதை திருவெற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர் மற்றும் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி ஆகியோர் வழங்கினார். இதனைத் தொடர்ந்து ஏழ்மை நிலையில் உள்ள ஆட்டோ ஓட்டுனருக்கு ஆட்டோ ஒன்று வழங்கினர் இந்நிகழ்வில் திமுக மூத்த நிர்வாகி ராமநாதன், கழகப் பேச்சாளர்கள் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி கருணாநிதி,சைலேஷ், பால உமாபதி, பரணி, உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மேலும் நலத்திட்டம் வழங்கிய ஆட்டோவில் திருவெற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே பி சங்கர் தொண்டர்களை வைத்துக்கொண்டு சுற்றி வந்தார் அனைவரும் கைத்தட்டி ஆரவாரம் செய்தனர்

# மருதம் நெல்லி ஜெயம் கல்லூரியில் இரத்ததான முகாம்



பென்னாகரம்:மார்-2

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் அருகே அமைந்துள்ள ஜெயம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இரத்த தான முகாம் நடைபெற்றது.

அதில் அரசு தருமபுரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இரத்த வங்கி, ஜெயம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்டம் மற்றும் இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் இணைந்து நடத்தியது. நிகழ்விற்கு மருதம் நெல்லி கல்விக் குழுமத்தின் தாளாளர் டாக்டர் கா.கோவிந்த் தலைமை வகித்தார்.ஜெயம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் சி.பரஞ்சோதி முன்னிலை வகித்தார்.

மேலும் இரத்த குருதி வங்கி மருத்துவர் பிரியா சிறப்பு விருந்தினராக பங்கேற்று நிகழ்வை நாட்டு நலப்பணித் திட்டம் அலுவலர் சதீஷ், பெருமாள், இளைஞர் செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் திருவாசகம் ஒருங்கிணைத்தனர். நிகழ்வில் கல்லூரி பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள் பலர் இரத்த தானம் செய்தனர்.




▶ புதுக்கோட்டை வெங்கடேஸ்வரா பாலிடெக்னிக் கல்லூரியில் இறுதியாண்டு மாணவர்களுக்கான "வளாக நேர்காணல் " கல்லூரியின் வளாகத்தில் நடைபெற்றது. இதில் சென்னை நிறுவனம் சார்பில் இந்த நேர்காணலில் அரசு பாலிடெக்னிக் கல்லூரி,கந்தர்வகோட்டை, அண்ணாமலை பாலிடெக்னிக் கல்லூரி, காரைக்குடி ஆகிய கல்லூரிகளில் இருந்து மாணவ,மாணவியர்கள் கலந்து கொண்டனர் நேர்காணலில் கலந்து கொண்டவர்களில் 28 மாணவர்கள் தேர்வானார்கள் மாணவர்களுக்கு நிறுவனத்தின் பொறுப்பாளர்கள் பணி நியமன ஆணையை வழங்கினர், கல்லூரியின் செயலாளர் பி .கருப்பையா, கல்லூரியின் பொருளாளர் ஆர்எம் வீ கதிரேசன் முதல்வர் எம் .ஆர்.ஜீவானந்தம் கல்லூரியின் துணை முதல்வர் திருமலை அரசன் வாழ்த்தினார்கள், ஏற்பாடுகளை கல்லூரியின் வேலைவாய்ப்பு அலுவலர் சரண்யா ராமன் கவனித்தார்.



▶ தமிழக முதலமைச்சர் 71 வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை திருவல்லிக்கேணி அரசு மருத்துவமனையில் இன்று பிறந்த குழந்தைகளுக்கு மருத்துவமனையில் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தங்க மோதிரம் அணிவித்தார். இதில் முக்கிய பிரமுகர்களாக கலாநிதி மாறன், அறங்காவலர் துறை அமைச்சர் சேகர்பாபு, சென்னை மேயர் பிரியா, மற்றும் அரசு மருத்துவர்கள் செவிலியர்கள் மற்றும் கட்சி உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்



▶ தமிழக முதலமைச்சரும் திமுக தலைவருமான மு. க. ஸ்டாலின் 71 வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்குப் பகுதி சார்பில் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. திருவெற்றியூர் கிழக்குப்பகுதி பகுதி செயலாளரும் மண்டல குழு தலைவர் தி.மு தனியரசு ஏற்பாட்டில் கிழக்கு பகுதி கழக திமுக அலுவலகத்தில் நடைபெற்ற பிறந்தநாள் விழாவில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி கலந்து கொண்டு கழக இருவர்ண கொடியேற்றி 1000 க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு இனிப்புடன் கூடிய அறுவை உணவை பறிமாறினார். நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி கணேசன், பகுதி அவைத்தலைவர் ஆசைதம்பி, பகுதி துணை செயலாளர்கள் RS சம்பத், குமார், 10 வது வட்ட செயலாளர் தமிழ்ச்செல்வன் பகுதி பிரதிநிதி 14 வார்டு ராஜன், வட்ட துணை செயலாளர் ஹாரி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



▶ புதுச்சேரி அரசு ஊரக வளர்ச்சி இயக்ககம், புதுவை மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் காரைக்கால் வட்டார வளர்ச்சி அலுவலகம் இணைந்து நடத்திய கொம்யூன் அளவிலான பாலின வன்முறைக்கு எதிரான பிரச்சார நிகழ்ச்சி கோட்டுச்சேரி சிங்காரவேலு பிள்ளை திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை கோட்டுச்சேரி நெடுங்காடு சட்டமன்ற உறுப்பினர் ச. சந்திர பிரியங்கா தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார் கு. அருணகிரிநாதன், வட்டார வளர்ச்சி அதிகாரி தலைமையுரை ஆற்றினார். சிறப்பு பேச்சாளர்கள் வைஜெயந்தி ராஜன், செவிலியர் அதிகாரி எஸ் மகேஸ்வரன், அறிஞர் அண்ணா அரசினர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தமிழ்த்துறை மூன்றாம் ஆண்டு மாணவி சிவப்பிரியா ஆகியோர் பாலின சமத்துவம் சம்பந்தமான உரை நிகழ்த்தினர். இந்நிகழ்ச்சியில் கோலப்போட்டி நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. இணை வட்டார வளர்ச்சி அலுவலகர், விரிவாக்க அலுவலர்கள்,கிராம சேவக்,ஜி.ஆர்.எஸ், வட்டார அளவிலான கூட்டமைப்பின் பொறுப்பாளர்கள், கோட்டுச்சேரி கொம்யூன் அனைத்து கூட்டமைப்பின் பொறுப்பாளர்கள், வட்டார அளவிலான மேலாளர், கணக்காளர், வட்டார மேலாளர்கள், சமூக வல்லுனர்கள் கணக்காளர்கள் சி.ஆர்.பி.ஸ் ஜெண்டர் சி.ஆர். பி, சுய உதவிக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர் .நிகழ்ச்சி ஏற்பாடுகளை கிராம சேவக் இருதய ராஜ் செய்திருந்தார்.



▶ வடகிழக்கு மாவட்ட திமுக வர்த்தக அணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் லயன் தியாகராஜன் ஏற்பாட்டில் சென்னை திருவொற்றியூரில் உள்ள ரெகோபோத் முதியோர் இல்லத்தில் தமிழக முதல்வருக்கு பிரார்த்தனை செய்து கேக் வெட்டி கொண்டாடப்பட்டது திருவொற்றியூரில் ஆதரவற்ற முதியோர் இல்லத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் தங்கி இருக்கும் நிலையில் அவர்களுக்கு தேவையான பொருட்களையும் வழங்கினர் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட திருவொற்றியூர் மேற்கு பகுதி செயலாளர் . அருள்தாசன் முதியோர் இல்லத்திற்கு அரிசி புடவை லுங்கி வழங்கினார் இதனை தொடர்ந்து அசைவ உணவு வழங்கப்பட்டது



▶ மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே கப்பலூரில் , பாரதிய ஜனதா கட்சியின் , விருதுநகர் பாராளுமன்ற தேர்தலுக்கான தேர்தல் அலுவலகம் திறப்பு விழா நடைபெற்றது, இந்த அலுவலகத்தில் பாஜக மாநில பொதுச் செயலாளர் ராம .சீனிவாசன் திறந்து வைத்து பேசினார். மேலும் இதே அலுவலகத்தை கடந்த ஆண்டு பாஜக ஆலய மேம்பாட்டு பிரிவு அலுவலகமாக அண்ணாமலை திறந்து வைத்தார்,. அதே அலுவலகத்தையே தற்போது ராம சீனிவாசன், பாஜக விருதுநகர் பாராளுமன்ற தொகுதி அலுவலகமாக திறப்பு விழா நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சமூகசேவகரை புதுச்சேரி முதலமைச்சர் ரங்கசாமியை நேரில் அழைத்து பாராட்டு



செங்கல்பட்டு,மார்-2

செங்கல்ப்பட்டு மாவட்டம் பெரும்பாக்கத்தை சேர்ந்தவர் டாக்டர் கலைமகன் என்கின்ற வெங்கடேசன் இவர் அனைவரையும் ஒன்றிணைத்து அனைத்து மக்கள் சக்தி இயக்கம் என்ற சமூக சேவை இயக்கத்தை ஏற்படுத்தி அதன் மூலம் ஏழை மக்களுக்கு பல்வேறு உதவிகள் செய்து வருகிறார்.

இவரது சேவையை பாராட்டி புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி ,அவரை நேரில் அழைத்து பாராட்டி வாழ்த்து செய்தி அளித்தார். அதில் அவர் கூறி இருப்பதாவது, சமத்துவமான சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் அனைத்து மக்கள் சக்தி இயக்கம் என்ற சமூக சேவை இயக்கத்தை ஏற்படுத்தி அதன் மூலம் ஏழை மக்களுக்கு பல்வேறு உதவிகள் செய்து வரும் டாக்டர் கலைமகன் என்கின்ற வெங்கடேசன் பணி மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது.

அதுமட்டுமல்லாமல்மாணவ மாணவிகளின் வாழ்க்கை மற்றும் குறிக்கோளினை அடைய அவர்களை உற்சாகப்படுத்திவருவதுமிகவும் பாராட்டுக்குரியதாகும். மேலும் கலைமகன் (என்கின்ற) வெங்கடேசன் இதுவரை தான் செய்த மக்கள் பணிகளையும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் தொகுப்புகளையும் ப்ராஜெக்ட் (50) என்ற பெயரில் புத்தகமாக தொகுத்துள்ளார்.

என்பது மிகவும் பாராட்டு கூறியதாகும் ,மேலும் இந்த புத்தகமானது பல்லாயிரக்கணக்கான மக்களை சென்றடைய எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என்று புதுச்சேரி முதலமைச்சர் ரங்கசாமி வாழ்த்துக்கள் தெரிவித்துள்ளார்.

# 8 ஆம் வகுப்பு மாணவி 6 மாதம் கர்ப்பம் தந்தை புகார் அண்ணன் உறவு முறை வாலிபர் கைது



சென்னை,மார்,2

சென்னை புதுவண்ணாரப்பேட்டை 8 ஆம் வகுப்பு மாணவி 6 மாதம் கர்ப்பம் அடைந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சிறுமியின் தந்தை இராயபுரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் சென்னை புதுவண்ணாரப்பேட்டை பூண்டி தங்கம்மாள் தெருவைச் சேர்ந்த 13 வயதுடைய சிறுமி இவர் பழைய வண்ணாரப்பேட்டை திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் உள்ள மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 8 ஆம் வகுப்பு படித்து வருகிறார்.

இந்நிலையில் நேற்று சிறுமிக்கு வயிற்று வலி ஏற்பட்டுள்ளது உடனடியாக மகளை அழைத்துக் கொண்டு தந்தை அருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு சென்று காண்பித்தார் சிறுமியை பரிசோதனை செய்த மருத்துவர்கள் வயிற்று வலிக்கு ஊசி போட்டு அனுப்பி வைத்து இராயபுரத்தில் உள்ள அரசு ஆர் எஸ். ஆர். எம் மகப்பேறு மருத்துவமனையில் சிகிச்சை பெற மருத்துவர் அறிவுறுத்தியுள்ளார்.

இதனையடுத்து மகளை அழைத்துக் கொண்டு தந்தை இராயபுரம் அரசு ஆர் எஸ். ஆர். எம் மகப்பேறு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தார். சிறுமியை பரிசோதனை செய்த மருத்துவர்கள் சிறுமி 6 மாதம் கர்ப்பமாக இருப்பதாக தெரிவித்தனர்.

இச்சம்பவம் குறித்து மருத்துவமனையில் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தனர். தகவலின் பேரில் இராயபுரம் அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் வழக்கு பதிவு சிறுமியிடம் விசாரணை செய்த போது கர்பமாக இருப்பதற்கு அண்ணன் உறவு முறையான மனோஜ்( 24),அஜய் (27),கண்ணா (22) என தெரிவித்தார். இதனையடுத்து மனோஜை இராயபுரம் அனைத்து மகளிர் போலீசார் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வழக்குப்பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்

# செம்பனார்கோவில் தெற்கு ஒன்றியத்தில் தமிழ்நாடு முதலமைச்சரின் பிறந்தநாள் விழா கொண்டாட்டம்





தரங்கம்பாடி , மார். 2-

தமிழ்நாடு முதலமைச்சரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா தமிழ்நாடு முழுவதும்திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகிகளால் கொண்டாடப்பட்டு வருகிறது.

அந்த வகையில் மயிலாடுதுறை மாவட்டம்,தரங்கம்பாடி தாலுகா, செம்பனார் கோவில் தெற்கு ஒன்றியத்தில் , பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் அறிவுறுத்தலின்பேரில்,செம்பை தெற்கு ஒன்றிய செயலாளர் எம். அப்துல் மாலிக் தலைமையில் திருக்களாச்சேரி ஊராட்சி ஆயப்பாடி, கொத்தங்குடி ஊராட்சி வேலம்புதுக்குடி, ஈச்சங்குடி ஊராட்சி கடலி, திருக்களாச்சேரி, நெடுவாசல், உத்திரங்குடி, சங்கரன்பந்தல் உள்ளிட்ட ஊராட்சிகளில் தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது.

நிகழ்ச்சிகளில் முன்னதாக கழக கொடி ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்புகள், புடவை, மரக்கன்றுகள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார். நிகழ்ச்சியில் தஞ்சை மண்டல தகவல் தொழில்நுட்ப அணி பொறுப்பாளர் பி எம் ஸ்ரீதர், மாவட்ட பிரதிநிதிகள் கேபி ராஜா, கே எஸ் எஸ் கருணாநிதி, நெசவாளர் அணி செயலாளர் பாண்டு, ஈச்சங்குடி இளங்கோவன், திருவிளையாட்டம் இளங்கோவன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வினோத் பாண்டியன், ஊராட்சி மன்ற தலைவர்கள் பைலட் , குமார், தம்பு மோகன், உமாராணி, லெனின் மேசாக் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# சென்னை தலைமைச் செயலகத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் கடலூரில் ஓய்வு பெற்ற ஆசிரியரை பிடித்து போலீஸ் விசாரணை



சென்னை : மார். 2,

சென்னை தலைமைச் செயலகத்தில் குண்டு வெடிக்கும் என தனியார் தொலைக்காட்சிக்கு வந்த மிரட்டல் அழைப்பு காரணமாக தலைமைச் செயலகம் முழுவதும் அதிரடியாக சோதனை மேற்கொள்ளப்பட்டது.

நேற்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் பிறந்த நாளையொட்டி பல்வேறு பகுதிகளில் போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். இந்நிலையில் தலைமைச் செயலகத்தில் நேற்றைய தினம் வெடிகுண்டு வெடிக்கும் என காலை 7.30 மணியளவில் தனியார் தொலைக்காட்சிக்கு செல்போன் மூலம் மிரட்டல் வந்துள்ளது. இதனையடுத்து உடனடியாக தகவல் தெரிவிக்கப்பட்டு சம்பவ இடத்திற்கு வந்த வெடிகுண்டு நிபுணர்கள், மோப்ப நாய்களை கொண்டு தலைமைச் செயலகம் முழுவதும் சோதனை நடத்தினர்.

அமைச்சர்கள் அறை, பேரவை நடைபெறும் இடம், முக்கிய அறைகள் என அனைத்து இடங்களிலும் அதிரடியாகசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது. வெடிகுண்டு உள்ளதா என்பது குறித்து கருவிகள் மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அனைத்து இடங்களிலும் இரண்டு குழுக்களாக பிரிந்து சோதனைகள் நடைபெற்றது. சுமார் 2 மணி நேரம் நடைபெற்ற இந்த சோதனையில் சந்தேகத்திற்குரிய பொருட்கள் எதுவும் கிடைக்கவில்லை. இதையடுத்து வெடிகுண்டு மிரட்டல் உண்மையா அல்லது புரளியா என்பது குறித்தும் போலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

ஏற்கனவே கடந்த சில நாட்களுக்கு முன்பு தனியார் பள்ளிகளுக்கு வெடிகுண்டு வைக்கப்பட்டுஇருப்பதாக இமெயில் மூலம் மிரட்டல் விடுக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் தற்போது தனியார் தொலைக்காட்சி மூலம் தலைமைச் செயலகத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ள சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதையடுத்து தலைமைச் செயலகம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் போலீஸார் பாதுகாப்பை அதிகரித்துள்ளனர்.

இந்த நிலையில் வெடிகுண்டு மிரட்டல் விடுத்ததாக கடலூரைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியரான பிரகாஷ் என்பவரை பிடித்து போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.





வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி தலைமையில் நேற்று சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி வளாகக் கூட்டரங்கில் 2024-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திற்கான அனைத்து இணை ஆணையர்களின் பணித்திறன் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வணிகவரித்துறை மற்றும் பதிவுத்துறை அரசுச் செயலாளர் ஜோதி நிர்மலாசாமி, வணிகவரித்துறை ஆணையர் ஜகந்நாதன், இணை ஆணையர் நிர்வாகம் இரத்தினசாமி, மற்றும் வணிகவரித் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி தாலுகா காத்தான்விடுதி அரசு பள்ளியில் ஆண்டுவிழா நடைபெற்றது, விழாவிற்கு கறம்பக்குடி வட்டாரக்கல்வி அலுவலர் துரையரசன் தலைமை வகித்தார், பள்ளித்தலைமை ஆசிரியர் கணேசன் வரவேற்புரை நல்கினார், ஊராட்சி மன்றத்தலைவர் பிரேமா ரெத்தினம்,ஒன்றியக்குழு உறுப்பினர் முத்துக்குமார்,ஊராட்சி மன்ற உறுப்பினர் மாரிக்கண்ணு, பள்ளிமேலாண்மைக்குழு தலைவர் அஞ்சலைதேவி,ஊராட்சி செயலாளர் முருகன் ஆய்வக உதவியாளர் பாலசுப்பிரமணியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்,பள்ளி மாணவர்களின் மாறுவேடப்போட்டிகள், நடன நிகழ்வுகள் நடைபெற்றன,இறுதியில் பள்ளி ஆசிரியர் கயல்விழி ஆசிரியர் நன்றி கூறினார், நிகழ்வில் பெற்றோர்களும்,பொதுமக்களும் திரளாக கலந்துகொண்டனர்.

# அரியலூரில் பெண் குழந்தைகள் விழிப்புணர்வு பேரணி

அரியலூர்,மார்ச்.2-

அரியலூரில் பெண் குழந்தைகள் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

அரியலூர் அரசு கலைக் கல்லூரியில் தொடங்கி, அண்ணா சிலை வரை நடைபெற்ற, பெண் குழந்தைகள் விழிப்புணர்வு பேரணிக்கு, அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் ராமகிருஷ்ணன் தலைமை வகித்தார்.

அரியலூர் மாவட்ட விளையாட்டு அலுவலர் லெனின் முன்னிலை வகித்தார். அரியலூர் அரசு கலைக்கல்லூரி மாணவிகள் பலரும் பங்கேற்று நடத்திய இந்த பேரணியில், அரியலூர் தாசில்தார் ஆனந்தவேல், அரசு கலைக்கல்லூரி முதல்வர் டோமினிக், காவல் ஆய்வாளர் சந்திரசேகரன், அரியலூர் மாவட்ட விளையாட்டு அலுவலகப் பயிற்சியாளர்கள் சந்தோஷ், ஹரிஹரன், வாசுதேவன், உதவியாளர் மெர்சி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



# அன்பு இல்லம் மனநல காப்பகம் முதியோர் இல்லத்தில் மருத்துவர் அணி சார்பாக நலத்திட்ட உதவிகள்



தென்காசி,மார்ச்.2-

தென்காசி மாவட்டம் வடகரையில் மருத்துவர் அணி சார்பாக தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் 71- வது பிறந்தநாள் நிகழ்ச்சியில் அன்பு இல்லம் மனநல காப்பகம் வடகரை காப்பகத்தில் முதியோர்களுக்குவீல்சேர், டெர்லெஹேர், மருந்து மாத்திரைகள் தமிழக முதல்வர் பிறந்தநாளில் முதியோர்களுக்கும், நோயாளிகளுக்கும் தெற்கு மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர்மருத்துவர் அன்பரசன் தலைமையில், மருத்துவர் மாரிமுத்து மாவட்டத் தலைவர், பொதுக்குழு உறுப்பினர், வடகரை சேர்மன் ஷேக் தாவுது, மாவட்ட பொருளாளர் ஷெரிப், தமிழரசன் கௌதமி, அன்பு இல்லம் இயக்குனர் ராஜேஷ் ஜோசப், துணை இயக்குனர் சுராஜ் அடிகள் முன்னிலையில் நூற்றுக்கும் மேற்பட்ட நோயாளிகளுக்குமருந்து, மாத்திரைகள் வழங்கப்பட்டது.

மேலும் நிகழ்ச்சியில் தங்கப்பா என்ற முகமது உசேன் பேரூர்கழக செயலாளர், நூர் முகம்மது துணை செயலாளர், முகம்மது கனிமாவட்டவிவசாய அணிதுணைஅமைப்பாளர், முகம்மது இஸ்மாயில் மாவட்ட மீனவரணி துணைஅமைப்பாளர், ஆகியோர் பிறந்தநாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.



தென்காசி மாவட்டம் கடையநல்லூரில் மணிகூண்டு பெரிய பள்ளிவாசல் முன்பாக தலைமை செயற்குழு உறுப்பினர் முன்னாள் மாவட்ட செயலாளர் மா. செல்லத்துரை தலைமையில் தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் 71 வது பிறந்தநாள் விழா நிகழ்ச்சியில் பொது மக்களுக்கு லட்டு வழங்கி பிறந்தநாள் நிகழ்ச்சியை கொண்டாடினர், நிகழ்ச்சியில் கடையநல்லூர் நகர் மன்றத் தலைவர் மூப்பன் ஹபீபுர் ரஹ்மான் , துணைத் தலைவர் ராசையா, ஒன்றிய குழு துணைத் தலைவர் ஐவேந்திரன் தினேஷ், ஒன்றியச் செயலாளர் சுரேஷ், திட்டக்குழு உறுப்பினர்ரா. முருகன், நகர்மன்ற உறுப்பினர்கள் முகைதீன் கனி, சிட்டி திவான் மைதீன், நகரத் துணைச் செயலாளர் காசி, முருகையா, மதி, நல்லையா, முருகானந்தம், இத்தாலியன் பீரப்பா,யாசின், செய்யது மீரான், செய்யது மசூது, அப்துல் ரசாக் ஆகியோர் பிறந்தநாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

# உடையார்பாளையத்தில் மு.க ஸ்டாலின் பிறந்தநாள் விழா



அரியலூர்,மார்ச்.2-

உடையார் பாளையத்தில் நகர திமுக சார்பில், மு.க ஸ்டாலின் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது.

உடையார்பாளையம் நகர திமுக சார்பில் நடைபெற்ற, தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் பிறந்தநாள் விழாவுக்கு, கட்சியின் நகரத் தலைவர் ப. கோபாலகிருஷ்ணன் தலைமை வகித்தார், உடையார்பாளையம் பேரூராட்சி தலைவர் மலர் விழி ரஞ்சித்குமார் முன்னிலை வகித்தார்.

திமுக தலைவர் மற்றும் தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் 71 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, நகர திமுக சார்பில், உடையார்பாளையம் பேருந்து நிலையத்தில் உள்ள, பேரறிஞர் அண்ணா உருவ சிலைக்கு மலர் மாலை அணிவித்து இனிப்பு வழங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 23 ஆட்டோ டிரைவர்களுக்கு, சீருடைகள் வழங்கப்பட்டன. மேலும் உடையார்பாளையம் நகரில் உள்ள, ஐந்து தொடக்கப் பள்ளிகளை சேர்ந்த, 360 மாணவ, மாணவிகளுக்கு, வாய்ப்பாடு, பேனா, பென்சில் மற்றும் லட்டு வழங்கப்பட்டது. இதை தொடர்ந்து, உடையார்பாளையம்-ஜெயங்கொண்டம் சாலையில், மரக்கன்றுகள் நடும் திட்ட தொடக்க விழாவை, உடையார்பாளையம் பேரூராட்சி தலைவர் மலர்விழி ரஞ்சித்குமார் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில், உடையார்பாளையம் பேரூராட்சிதிமுகவார்டு செயலாளர்கள், வார்டு உறுப்பினர்கள் மற்றும் திமுக நிர்வாகிகள், உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# அரியலூரில் 12ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வு நடைபெறும் மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, பார்வையிட்டார்



அரியலூர், மார்.2-

அரியலூர் மாவட்டம், அரியலூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெறும் 12ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வு மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, நேற்று நேரில் பார்வையிட்டார்.

தமிழ்நாடு முழுவதும் 12-ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வு 01.03.2024 துவங்கி உள்ளது. அந்த வகையில் அரியலூர் மாவட்டத்தில் 12-ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வினை 90 மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் 4,026 மாணவர்களும், 4,343 மாணவிகளும் என ஆக மொத்தம் 8,369 மாணவ/ மாணவிகள் 45 தேர்வு மையங்களில் தேர்வினை எழுத இருந்தனர். அதே போன்று தனித் தேர்வர்கள் 46 ஆண்களும், 42 பெண்களும் என மொத்தம் 88 நபர்கள் தேர்வினை எழுத இருந்தனர்.

இதில் நேற்று நடைபெற்ற 12 ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வினை 3,935 மாணவர்களும், 4,284 மாணவிகளும் என மொத்தம் 8,219 மாணவ மாணவிகள் தேர்வினை எழுதினர். மேலும் 91 மாணவர்களும், 59 மாணவிகளும் என மொத்தம் 150 மாணவ, மாணவிகள் தேர்வு எழுத வரவில்லை.

இதே போன்று தனித்தேர்வர்களில் 42 ஆண்களும்,37பெண்களும் என மொத்தம் 79 நபர்கள் தேர்வு எழுதினர். மேலும் 4 ஆண்களும், 5 பெண்களும் என மொத்தம் 9 நபர்கள் தேர்வு எழுத வரவில்லை.

மேலும் அரியலூர் மாவட்டத்தில் நடைபெற்ற 12 ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வினை எழுத 4,072 மாணவர்களும், 4,385 மாணவிகளும் என மொத்தம் 8,457 மாணவ மாணவிகள் விண்ணப்பித்திருந்தனர். இதில் 3,977 மாணவர்களும், 4,321 மாணவிகளும் என மொத்தம் 8,298 மாணவ மாணவிகள் தேர்வினை எழுதினர். மேலும் 95 மாணவர்களும், 64 மாணவிகளும் என மொத்தம் 159 மாணவ மாணவிகள் தேர்வு எழுத வரவில்லை.

தேர்வுகளில் முறைகேடுகளை தடுக்கும் வகையில் பறக்கும் படை உறுப்பினர்கள் 75 நபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அமைக்கப்பட்டுள்ளது. தேர்வுப்பணிகள் சார்ந்து தேர்வு நடைபெறும் நாட்களில் தடையில்லா மின்சாரம் வழங்கவும், மாணவ / மாணவிகள் குறித்த நேரத்தில் தேர்வு மையத்திற்கு தேர்வெழுத ஏதுவாக போதிய பேருந்து வசதியும், ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் தேர்வுகள் அமைதியாக நடைபெற ஒவ்வொரு தேர்வு மையத்திற்கும் ஒரு ஆயுதம் தாங்கிய காவலர் உட்பட போதிய காவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, தெரிவித்தார்;.

இந்நிகழ்வில், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் த.விஜயலட்சுமி, வருவாய் கோட்டாட்சியர் ராமகிருஷ்ணன், வட்டாட்சியர் ஆனந்தவேல், ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# பணிப்பெண் சித்ரவதை செய்த வழக்கில் திமுக எம்எல்ஏ மகன், மருமகளுக்கு நிபந்தனை ஜாமீன்



சென்னை : மார். 2-

பணிப்பெண்ணை சித்ரவதை செய்த வழக்கில், பல்லாவரம் திமுக எம்எல்ஏ கருணாநிதியின் மகன் ஆண்டோ மதிவாணன் மற்றும் மருமகள் மெர்லினா ஆகியோருக்கு நிபந்தனை ஜாமீன் அளிக்கப்பட்டுள்ளது.

இரண்டு வாரங்களுக்கு விசாரணை அதிகாரிகள் முன்பு ஆஜராக வேண்டும் என்று நிபந்தனையுடன் சென்னை உயர் நீதிமன்றம் இருவருக்கும் ஜாமீன் வழங்கியுள்ளது. ஜாமீன் கோரி இருவரும் தாக்கல் செய்த மனு நேற்று நீதிபதி நிர்மல் குமார் முன் விசாரணைக்கு வந்தது. அப்போது திமுக எம்எல்ஏ மகன் மற்றும் மருமகன் தரப்பில், "பெற்றோர் இல்லாமல் தங்களது 4 வயது குழந்தை பாதிக்கப்பட்டுள்ளது. எனவே எங்களுக்கு ஜாமீன் வழங்க வேண்டும்" என்ற கோரிக்கையினை முன் வைத்தனர்.

ஆனால், பாதிக்கப்பட்ட பெண் தரப்பில் இருந்து, இருவருக்கும் ஜாமீன் வழங்க ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது. ஏனென்றால், விசாரணை என்பது முறையாக நடைபெறவில்லை. விதிகளை பின்பற்றி விசாரணை நடைபெறவில்லை என்றும் குற்றம் சாட்டப்பட்டது.

இந்த குற்றச்சாட்டுக்கு காவல்துறை சார்பில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில், "வழக்கு தொடர்பாக இதுவரை 16 சாட்சிகளிடம் விசாரணை நடைபெற்றுள்ளது. இந்த வழக்கை பொறுத்தவரை உரிய அதிகாரியை கொண்டு முறையாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விசாரணையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. எனினும் சாட்சியை கலைக்கக்கூடும் என்கிற வாய்ப்பு இருப்பதால் இருவருக்கும் ஜாமீன் வழங்கக்கூடாது" என்று தெரிவிக்கப்பட்டது.

அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, இரண்டு வாரங்களுக்கு நீலாங்கரை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் தினமும் ஆஜராகி கையெழுத்திட வேண்டும் என்ற நிபந்தனையுடன் இருவருக்கும் ஜாமீன் வழங்கி உத்தரவிட்டார்.

# மக்களவைத் தேர்தலில் மதிமுகவுக்கு பம்பரம் சின்னம் கோரிய வழக்கு தேர்தல் ஆணையம் ஒரு வாரத்தில் பதிலளிக்க ஐகோர்ட் உத்தரவு



சென்னை : மார். 2-

எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் பம்பரம் சின்னம் ஒதுக்கும்படி தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடக் கோரி, மதிமுக பொதுச் செயலாளர் வைகோ தொடர்ந்த மனுவுக்கு தேர்தல் ஆணையம் ஒரு வாரத்தில் பதிலளிக்க சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில், மதிமுக சார்பில் கட்சியின் பொதுச் செயலாளர் வைகோ தாக்கல் செய்துள்ள மனுவில், கடந்த 1996-ம் ஆண்டு முதல் சட்டமன்றம் மக்களவை மற்றும் உள்ளாட்சித் தேர்தல்களில் மதிமுக போட்டியிட்டுள்ளது. இந்தத் தேர்தல்களில் தங்கள் கட்சிக்கு பம்பரம் சின்னம் ஒதுக்கப்பட்டது. கடந்த 2006-ம் ஆண்டு நடந்த சட்டமன்றத் தேர்தலில் 5.99 சதவீத வாக்குகள் பெற்ற நிலையில், 5.98 சதவீத வாக்குகள் பெற்றுள்ளதாக கூறி, தங்கள் கட்சியின் அங்கீகாரத்தை தேர்தல் ஆணையம் ரத்து செய்தது.

அதன்பின் கடந்த 2014-ம் ஆண்டு நடந்த மக்களவைத் தேர்தலில் பம்பரம் சின்னம் ஒதுக்கப்பட்ட நிலையில், எதிர்வரும் மக்களவைத் தேர்தலிலும் பம்பரம் செல்லும் ஒதுக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் தேர்தல் ஆணையத்துக்கு மனு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பம்பரம் சின்னம் பொது சின்னம் இல்லை என்பதாலும், வேறு எந்தக் கட்சியும் அந்த சின்னத்தை கோரவில்லை என்பதாலும், தங்கள் மனுவை பரிசீலித்து, பம்பரம் சின்னம் ஒதுக்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும் என்று மனுவில் கோரியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் எஸ்.எஸ்.சுந்தர் மற்றும் ஜி.அருள்முருகன் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது வைகோ தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் அஜ்மல் கான், "மக்களவைத் தேர்தல் தேதி எப்பொழுது வேண்டுமானாலும் அறிவிக்கலாம். எனவே எங்களது விண்ணப்பத்தை விரைந்து பரீசிலிக்க உத்தரவிட வேண்டும்" என வாதிட்டார்.

அப்போது தேர்தல் ஆணையம் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் நிரஞ்சன் ராஜகோபாலன், மனு தொடர்பாக பதிலளிக்க அவகாசம் வழங்க வேண்டும் எனக் கோரினார். இதையடுத்து, மதிமுக சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவுக்கு தேர்தல் ஆணையம் பதிலளிக்க உத்தரவிட்ட நீதிபதிகள், பதிவு செய்யப்பட்ட அங்கீகாரம் இல்லாத கட்சி வேட்பாளர்களுக்கு பொதுச் சின்னம் ஒதுக்கீடு செய்வது தொடர்பான பிரிவின் கீழ் விண்ணப்பிக்க மதிமுகவுக்கு அனுமதி அளித்தனர்.

அந்த விண்ணப்பத்தை பரிசீலித்து தகுந்த உத்தரவை பிறப்பிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்ட நீதிபதிகள், வழக்கின் விசாரணையை மார்ச் 7-ம் தேதிக்கு தள்ளி வைத்தனர்.

# போதைப் பொருள் விற்பனையை இரும்புக்கரம் கொண்டு அடக்க வேண்டும் : தமிழக அரசுக்கு டிடிவி கோரிக்கை



சென்னை : மார். 2, தமிழக இளைஞர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு போதைப் பொருள் விற்பனையை இரும்புக்கரம் கொண்டு அடக்க தமிழக அரசு முன்வர வேண்டும் என அம்மா மக்கள் முன்னேற்றக்கழக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து நேற்று அவர் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்: "சென்னையில் இருந்து செங்கோட்டை செல்லும் பொதிகை எக்ஸ்பிரஸ் ரயிலில் போதைப் பொருள் கடத்தப்படுவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் நுண்ணறிவுப் பிரிவு போலீசார் மதுரையில் நடத்திய சோதனையில் 30 கிலோ எடையிலான போதைப் பொருள் ஒரே நபரிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஏற்கனவே ரூ.2000 கோடி மதிப்பிலான போதைப் பொருள் கடத்தல் வழக்கில் ஜாபர் சாதிக் எனும் திமுக முன்னாள் நிர்வாகி உட்பட பலர் தேடப்பட்டு வரும் நிலையில், தற்போது மதுரை ரயில் நிலையத்தில் பல கோடி ரூபாய் மதிப்பிலான போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்டிருக்கும் செய்தி தமிழகம் முழுவதையுமே அதிர்ச்சிக் குள்ளாக்கியுள்ளது.

தமிழக அரசின் அலட்சியப் போக்கால், தடை செய்யப்பட்ட போதைப் பொருட்கள் தடையின்றி விற்பனை செய்யப்படுவதால் மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் போதைப் பழக்கத்திற்கு அடிமையாகி தங்களின் எதிர்காலத்தை இழந்து வருவதாக பெற்றோர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

எனவே, மதுரையில் போதைப் பொருள் கடத்திய நபரை முழுமையான விசாரணைக்கு உட்படுத்தி பின்னணியில் செயல்பட்டவர்களையும் கண்டறிந்து அவர்களுக்கும் உரிய தண்டனை பெற்றுத் தருவதோடு, தமிழக இளைஞர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு இனியாவது போதைப் பொருள் விற்பனையை இரும்புக்கரம் கொண்டு அடக்க தமிழக அரசு முன்வர வேண்டும் எனவும் வலியுறுத்துகிறேன்." என தினகரன கூறியுள்ளார்.



கிருஷ்ணகிரி மாவட்டம், கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியம், பெட்டமுகிலாளம் ஊராட்சி, குல்லட்டி கிராமத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பாக அமைக்கப்பட்டிருந்த தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# 12 வருட கிரிக்கெட்டில் முதல் முறை வில்லியம்சன் அவுட் ஆன வீடியோ வைரல்

**வெலிங்டன் : மார். 2,**

**நியூசிலாந்து - ஆஸ்திரேலியா அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் வியாழக்கிழமை வெலிங்டனில் தொடங்கியது. முதலில் பேட்டிங் செய்த ஆஸ்திரேலியா கேமரூன் கிரீன் சதத்தால் முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 9 விக்கெட்டுக்கு 279 ரன்கள் எடுத்திருந்தது.**



தொடர்ந்து நேற்று 2-வது நாள் ஆட்டம் நடந்தது. கேமரூன் கிரீன் தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி 150 ரன்னை கடந்தார். கடைசி விக்கெட்டாக ஹேசில்வுட் 22 ரன்னில் அவுட் ஆனார். இறுதியில் ஆஸ்திரேலியா 115.1 ஓவர்களில் 383 ரன்கள் குவித்து ஆல்-அவுட் ஆனது. நியூசிலாந்து தரப்பில் ஹென்றி 5 விக்கெட் வீழ்த்தினார்.

பின்னர் முதல் இன்னிங்சை விளையாடிய நியூசிலாந்து திணறியது. அந்த அணி 29 ரன்னுக்கு 5 விக்கெட்டை இழந்தது. பின்னர் பிலிப்ஸ்-ப்ளண்டெல் ஜோடி நிதானமாக விளையாடியது. பிலிப்ஸ் அரை சதம் அடித்தார். அவர் 72 ரன்னிலும், ப்ளெண்டெல் 33 ரன்னிலும், ஹென்றி 42 ரன்னிலும் அவுட் ஆனார்கள். இதனால் நியூசிலாந்து 43.1 ஓவரில் 179 ரன்னில் சுருண்டது. ஆஸ்திரேலியா தரப்பில் நாதன் லயன் 4 விக்கெட் கைப்பற்றினார்.

இந்நிலையில் இந்த போட்டியில் வில்லியம்சன் 0 ரன்னில் ரன் அவுட் ஆனார். ஸ்டார்க் ஓவரில் மிட் ஆப் திசையில் அடித்து விட்டு ஒரு ரன் எடுக்க வில்லியம்சன் ஓடிய போது எதிரே ஓடி வந்த யங் மீது மோதினார். இதனால் இருவரும் நடுபிட்சில் இருக்கும் போது ஆஸ்திரேலிய வீரர் லெபுசன் நேரடியாக ஸ்டெம்பில் அடித்தார். இந்த ரன் அவுட் மூலம் அவரது 12 வருட டெஸ்ட் கிரிக்கெட்டில் முதல் முறையாக வில்லியம்சன் ரன் அவுட் ஆகி உள்ளார். இந்த வீடியோ தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

# 6 ஆண்டுகளுக்குப் பின் மகளிர் உள்ளூர் டெஸ்ட் கிரிக்கெட் – பிசிசிஐ அறிவிப்பு

**புனே : மார். 2,**

**ஆறு ஆண்டுகளுக்கு பிறகு மகளிருக்கான உள்ளூர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளை பிசிசிஐ நடத்தவுள்ளது.**

இந்திய மகளிர் அணி சமீபகாலமாக டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்று வருகிறது. ஆஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்துக்கு எதிராக டெஸ்ட் போட்டிகளில் இந்திய மகளிர் அணி விளையாடிய நிலையில் அதற்கு வரவேற்பு கிடைத்தது. இந்தநிலையில் மகளிருக்கான டொமஸ்டிக் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளை பிசிசிஐ நடத்தவுள்ளது. மகளிருக்கான டொமஸ்டிக் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியானது கடைசியாக கடந்த 2018-ஆம் ஆண்டு நடைபெற்றது.

தற்போது ஆறு ஆண்டுகளுக்கு பிறகு மார்ச் 28 முதல் புனேவில் சீனியர் இன்டர் ஜோனல் மல்டி-டே டிராபி என்கிற தொடரை நடத்தப்போவதாக பிசிசிஐ அறிவித்துள்ளது. பிசிசிஐயின் இந்த அறிவிப்பு இந்திய வீராங்கனைகள் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.



இந்திய அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் அமிதா சர்மா, "பிசிசிஐ எடுத்த இந்த நடவடிக்கை வரவேற்கத்தக்கது. தேசிய அணி மீண்டும் டெஸ்ட் கிரிக்கெட்டை விளையாடத் தொடங்கியுள்ள தற்போதைய நிலையில் அடுத்த தலைமுறை கிரிக்கெட் வீரர்கள் உள்நாட்டு அளவில் டெஸ்ட் கிரிக்கெட் விளையாட வேண்டும். மண்டல மட்டத்தில் மட்டுமல்லாமல், மாநில அளவில் டொமஸ்டிக் போட்டிகளை நடத்த வேண்டும்" என்று வரவேற்றுள்ளார்.

புனேவில் மார்ச் 28ல் தொடங்கும் தொடரை மகாராஷ்டிரா கிரிக்கெட் சங்கம் நடத்துகிறது. கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு, மத்திய மற்றும் வடகிழக்கு மண்டலங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆறு அணிகள் இந்தத் தொடரில் பங்கேற்கவுள்ளன. 2018 சீசனில் இரண்டு நாட்டல் என்ற அளவில் போட்டிகள் நடைபெற்ற நிலையில், தற்போதையை தொடரில் இது மூன்று நாட்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது. மார்ச் 17-ம் தேதி மகளிர் பிரீமியர் லீக் முடிந்துவிடும் என்பதால் அதன்பிறகு இந்தப் போட்டிகள் தொடங்கப்படும்.

# 500 விக்கெட்டுகள் வீழ்த்துவது ஒன்றும் ஜோக் அல்ல அஸ்வினுக்கு கங்குலி பாராட்டு

**தர்மசாலா : மார். 2,**

**இங்கிலாந்துக்கு எதிரான 3-வது டெஸ்ட் போட்டியில் 500 விக்கெட்டுகளை எடுத்த இரண்டாவது இந்திய வீரர் என்ற மாபெரும் சாதனையை ரவிச்சந்திரன் அஸ்வின் படைத்தார்.**

இங்கிலாந்து அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. முதல் 4 போட்டிகள் முடிவடைந்த நிலையில் 3-1 என்ற கணக்கில் இந்திய அணி தொடரை கைப்பற்றி உள்ளது. இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கும் இடையிலான கடைசி டெஸ்ட் போட்டி மார்ச் 7ம் தேதி தர்மசாலாவில் நடைபெற உள்ளது.

இந்த போட்டி இந்திய சுழற்பந்து வீச்சாளரான ரவிச்சந்திரன் அஸ்வினுக்கு 100-வது டெஸ்ட் போட்டியாக அமைய உள்ளது. இந்திய அணிக்காக இதுவரை 312 வீரர்கள் டெஸ்ட் கிரிக்கெட்டில் அறிமுகமாகி விளையாடியுள்ள வேளையில் 13 வீரர்கள் மட்டுமே சர்வதேச கிரிக்கெட்டில் 100 டெஸ்ட் போட்டிகளுக்கு மேல் விளையாடி இருக்கிறார்கள். அந்த வகையில் தற்போது இந்த சாதனை பட்டியலில் ரவிச்சந்திரன் அஸ்வினும் இணைய உள்ளார்.



முன்னதாக இந்த தொடரின் 3-வது போட்டியில் 500 விக்கெட்டுகளை எடுத்த இரண்டாவது இந்திய வீரர் என்ற மாபெரும் சாதனையை ரவிச்சந்திரன் அஸ்வின் படைத்தார். இந்நிலையில் 500 டெஸ்ட் விக்கெட்டுகள் எடுப்பது ஜோக் அல்ல என்று ரவிச்சந்திரன் அஸ்வினை முன்னாள் இந்திய கேப்டன் கங்குலி பாராட்டியுள்ளார். மேலும் ஜடேஜா, குல்தீப், அஸ்வின் ஆகியோரால் இந்தியா சொந்த மண்ணில் வலுவான அணியாக திகழ்வதாக பெருமிதம் தெரிவிக்கும் அவர் இது பற்றி சமீபத்திய பேட்டியில் பேசியது பின்வருமாறு;- "அஸ்வின் ஆல் டைம் கிரேட். எந்த காலத்திலும் அவர் சிறப்பான வீரர். 500 விக்கெட்டுகள் எடுப்பது ஜோக் அல்ல. ரவீந்திர ஜடேஜா தற்சமயத்தில் மிகச் சிறந்த ஆல் ரவுண்டர்.

அவர் இந்திய சூழ்நிலைகளில் பேட்டிங் மற்றும் பவுலிங் துறையில் அசத்தக்கூடியவர். அதேபோல குல்தீப் யாதவ் சிறப்பாக கம்பேக் கொடுத்தார் என்று நினைக்கிறேன். அவர் தற்போது பெரிய அளவில் முன்னேறியுள்ளார். அஸ்வின் மற்றும் ஜடேஜா ஆகியோர் இருப்பதால் அவர் எந்த வகையிலும் குறைவாக செயல்படவில்லை. இந்த தொடரில் தன்னுடைய முத்திரையை பதித்துள்ள அவர் இந்தியாவுக்காக நீண்ட காலம் விளையாடுவார்" என்று கூறினார்.

# மல்யுத்த அணி தகுதி போட்டியில் பங்கேற்க பஜ்ரங் புனியா மறுப்பு

**புதுடெல்லி : மார். 2,**

**மல்யுத்த சம்மேளன தலைவராக இருந்த பிரிஜ்பூஷன் சரண்சிங் மீது வீராங்கனைகள் பாலியல் குற்றச்சாட்டு கூறினர்.**



இதையடுத்து வீரர்-வீராங்கனைகள் போராட்டத்தில் குதித்தனர். பின்னர் மல்யுத்த சம்மேளனத்துக்கு நடந்த தேர்தலில் பிரிஜ்பூஷனின் ஆதரவாளர் சஞ்சய்சிங் தலைவராக வெற்றி பெற்றார். இதற்கும் வீரர்-வீராங்கனைகள் எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இந்தநிலையில் அடுத்த மாதம் கிரிகிஸ்தானில் நடைபெறும் ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் ஒலிம்பிக் தகுதி சுற்றுக்கு இந்திய அணி தேர்வுக்காக தகுதி போட்டிக்கு வருமாறு வீரர்-வீராங்கனைகளுக்கு இந்திய மல்யுத்த சம்மேளனம் அழைப்பு விடுத்துள்ளது. இதை மல்யுத்த வீரர் பஜ்ரங் புனியா நிராகரித்துள்ளார். மேலும் வருகிற 10-ந் தேதி டெல்லியில் நடைபெறும் தகுதி தேர்வு போட்டிக்கு தடை விதிக்க கோரி டெல்லி ஐகோர்ட்டில் பஜ்ரங் புனியா, வினேஷ் போகத், சாக்ஷி மாலிக் ஆகியோர் மனுதாக்கல் செய்துள்ளார்.

# ஹர்திக் பாண்ட்யாவுக்கு கிரிக்கெட் வாரியம் நிபந்தனை

**மும்பை : மார். 2,**

**இந்திய கிரிக்கெட் வாரியம், வீரர்களுக்கான புதிய ஒப்பந்த பட்டியலை வெளியிட்டது.**

இதில் முன்னணி பேட்ஸ்மேன்களான ஸ்ரேயாஸ் அய்யர், இஷான் கிஷன் ஆகியோர் நீக்கப்பட்டனர். ரஞ்சி கிரிக்கெட்டில் விளையாட இருவரையும் கிரிக்கெட் வாரியம் அறிவுறுத்தியது. ஆனால் அவர்கள் ரஞ்சி கிரிக்கெட்டில் விளையாடவில்லை. இதையடுத்து இருவரையும் வீரர்கள் ஒப்பந்தத்தில் இருந்து அதிரடியாக நீக்கியது.

இதற்கிடையே ஒரு ஆண்டாக உள்ளூர் போட்டிகளில் விளையாட ஹர்திக் பாண்ட்யா, 'ஏ' பிரிவு ஒப்பந்தத்தில் இருப்பது குறித்து முன்னாள் வீரர்கள் சிலர் கேள்வி எழுப்பி இருந்தனர். தனது உடல் தகுதி, டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாட ஒத்துழைக்காது என்று ஹர்திக் பாண்ட்யா கிரிக்கெட் வாரியத்திடம் தெரிவித்துள்ளார்.

இதை கிரிக்கெட் வாரியம் ஏற்று கொண்டதால், ரஞ்சி கிரிக்கெட்டில் விளையாடாத போதிலும் ஒப்பந்தத்தில் இடம் பெற்றுள்ளார். இந்த நிலையில் ஹர்திக் பாண்ட்யாவுக்கு கிரிக்கெட் வாரியம் நிபந்தனை விதித்துள்ளது. இந்தியாவுக்காக தொடர்ந்து ஒருநாள் மற்றும் டி-20 கிரிக்கெட்டில் விளையாட வேண்டுமென்றால் ஹர்திக் பாண்ட்யா உள்ளூர் தொடர்களான விஜய் ஹசாரே மற்றும் சையது முஷ்டாக் அலி கோப்பை தொடர்களில் விளையாட வேண்டும் என்று கிரிக்கெட் வாரியம் உத்தரவிட்டுள்ளது.



இதுகுறித்து கிரிக்கெட் வாரிய மூத்த நிர்வாகி ஒருவர் கூறியதாவது:- நாங்கள் ஹர்திக் பாண்ட்யாவிடம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம். அதில் உள்ளூர் வெள்ளைப் பந்து தொடர்களில் விளையாடுமாறு கூறியுள்ளோம். தற்போதைய நிலைமையில் கிரிக்கெட் வாரிய மருத்துவக் குழுவின் பரிந்துரைப்படி அவரால் ரஞ்சிக் கோப்பை போன்ற டெஸ்ட் தொடரில் விளையாட முடியாது. ஆனால் இந்தியாவுக்காக விளையாடாத சமயத்தில் ஹர்த்திக் பாண்ட்யா உள்ளூர் வெள்ளைப்பந்து தொடர்களில் விளையாட வேண்டும். அவர் அதில் விளையாடாவிட்டால் ஒப்பந்தத்தை இழக்க நேரிடும் என்றார்.

உள்ளூர் போட்டிகளில் விளையாட ஹர்திக் பாண்ட்யா உறுதி அளித்த பிறகே அவர் ஒப்பந்தத்தில் இடம் பெற்றதாக கூறப்படுகிறது. அதேபோல் ரோகித் சர்மா, விராட் கோலியும் முதல்தர கிரிக்கெட்டில் விளையாட வேண்டும் என்று முன்னாள் வீரர் கீர்த்தி ஆசாத் தெரிவித்துள்ளார்.

# மெஸ்சி என்று கோஷம் எழுப்பிய ரசிகர்களை நோக்கி ஆபாச சைகை – ரொனால்டோவுக்கு தடை

**ரியாத் : மார். 2,**

**போர்ச்சுகல் கால்பந்து அணியின் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ, சவுதி அரேபியாவைச் சேர்ந்த அல்- நாசர் கிளப்புக்காக விளையாடி வருகிறார்.**



சில தினங்களுக்கு முன்பு சவுதி புரோ லீக் கால்பந்தில் அல்-நாசர் அணி 3-2 என்ற கோல் கணக்கில் அல் ஷபப்பை தோற்கடித்தது. இந்த ஆட்டத்தின்போது ரொனால்டோவை நோக்கி எதிரணி ரசிகர்கள் மெஸ்சி.... மெஸ்சி என்று கோஷம் எழுப்பினர். இதை கேட்டு எரிச்சல் அடைந்த ரொனால்டோ ரசிகர்களை நோக்கி கையால் ஆபாச சைகை காட்டினார்.

இது குறித்து விசாரித்த சவுதி அரேபியா கால்பந்து சம்மேளனத்தின் ஒழுங்கு நடவடிக்கை கமிட்டி, ரொனால்டோவுக்கு அடுத்த லீக் போட்டியில் விளையாட தடையும், ரூ.4½ லட்சம் அபராதமும் விதித்தது. இதனால் ரொனால்டோ நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற அல் நாசர் - அல் ஹஸ்ம் இடையிலான போட்டியில் பங்கேற்கவில்லை. இந்த போட்டி 4-4 என்ற கோல் கணக்கில் சமனில் முடிந்தது. இதன் மூலம் இவரது தடை நேற்றுடன் முடிவுக்கு வந்தது குறிப்பிடத்தக்கது.

# சூப்பர் ஸ்டார் சூப்பர் முடிவு : ஏழைகளுக்கு இலவச சிகிச்சையளிக்க மருத்துவமனை கட்டுகிறார்

**சென்னை : மார். 2,**

**சென்னையில் 12 ஏக்கரில் நடிகர் ரஜினிகாந்த் நிலம் வாங்கியுள்ளார். இந்த இடத்தில் அவர் மருத்துவமனை கட்டத் திட்டமிட்டிருப்பதாகவும் அதில் ஏழைகளுக்கு இலவச சிகிச்சை அளிக்கப் போவதாகவும் செய்திகள் கசிந்துள்ளது.**

தமிழ் திரையுலகில் முன்னணி நடிகராக இருக்கும் நடிகர் ரஜினிகாந்த் கோடிகளில் சம்பளம் வாங்கும் நடிகர்களின் பட்டியலிலும் இருக்கிறார். இவருக்கு போயஸ் கார்டனில் சொந்த வீடு உள்ளது. இதுதவிர நீலாங்கரை, கேளம்பாக்கம் போன்ற பகுதிகளிலும் இவருக்கு வீடு உள்ளது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடிகர் ரஜினிகாந்த் நாவலூர் அருகே 12 ஏக்கரில் இடம் ஒன்றை வாங்கியுள்ளார். இதற்கான பத்திரப்பதிவுக்காக காலை திருப்போரூர் சார்பதிவாளர் அலுவலகம் வந்தார் ரஜினி. போலீஸ் பாதுகாப்பு இருந்தும் அவர் வரப்போகும் செய்தி அறிந்து அங்கு ஏராளமான ரசிகர்கள் கூடினர்.



அங்கு கூடியிருந்த ரசிகர்களைப் பார்த்து புன்னகைத்த ரஜினி, அவர்களைப் பார்த்து கையசைத்தார். நாவலூரில் புதிதாக வாங்கி இருக்கும் இடத்தில் நடிகர் ரஜினிகாந்த் மருத்துவமனை கட்ட இருப்பதாக சொல்லப்படுகிறது. சேவை மனப்பான்மையோடு இங்கு ஏழைகளுக்கு இலவச மருத்துவம் பார்க்கப்படும் என்றும் தகவல் வெளியாகியுள்ளது. இதுகுறித்து ரஜினி தரப்பிலிருந்து விரைவில் அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கலாம்.

வரலாறு சினிமா

# "ராஜேஷின் திரைக்கதையில் நடிப்பதில் பெருமை" – நடிகர் அதர்வா

**சென்னை : மார். 2,**

**எம்.ராஜேஷ் இயக்கத்தில் அதர்வா நடிக்கும் புதிய படத்தின் அறிவிப்பை படக்குழு அதிகாரபூர்வமாக வெளியிட்டுள்ளது. "பார்வையாளர்கள் ரசிக்கும் படமாக இது இருக்கும்" என இயக்குநர் ராஜேஷ் உறுதியளித்துள்ளார்.**



நடிகர் அதர்வா நடிப்பில் கடைசியாக கடந்த 2002-ம் ஆண்டு வெளியானது 'பட்டத்து அரசன்'. இந்தப்படத்தையடுத்து அவரது நடிப்பில் படங்கள் எதுவும் வெளியாகவில்லை. எம்.ராஜேஷை பொறுத்தவரை அவர் இயக்கத்தில் ஹன்சிகா நடித்த 'மை3' வெப்சீரிஸ் கடந்த ஆண்டு வெளியானது.

இந்நிலையில் ராஜேஷ் இயக்கத்தில் அதர்வா நடிக்கும் புதிய படத்தை ஸ்ரீ வாரி பிலிம் பி.ரங்கநாதன் தயாரிக்கிறார். இப்படத்தில் அதிதி ஷங்கர் நாயகியாக நடிக்கிறார். படத்துக்கு சாம் சிஎஸ் இசையமைக்கிறார். ஒளிப்பதிவை சுகுமாரன் கவனிக்கிறார்.

படம் குறித்து நடிகர் அதர்வா முரளி கூறும்போது, "இயக்குநர் ராஜேஷின் திரைக்கதையில் நான் நடிப்பது பெருமையான விஷயம். முழுக்க முழுக்க எண்டர்டெய்ன்மென்ட் படங்களை எதிர்பார்த்து திரையரங்குகளுக்கு வருபவர்களை இந்தப் படம் நிச்சயம் ஏமாற்றாது" என்றார்.

இயக்குநர் எம். ராஜேஷ் கூறும்போது, "காலத்துக்கு ஏற்றாற் போல, சினிமாவின் ஒவ்வொரு ஜானரிலும் மாற்றம் ஏற்படும். இருப்பினும், தமிழ் சினிமா ரசிகர்கள் என்டர்டெயினர் படங்களை ஒருபோதும் கொண்டாடத் தவறியதில்லை. பார்வையாளர்களை மகிழ்விக்கும் இதுபோன்றத் தருணங்களை என் படங்களில் கொடுப்பதை நான் பாக்கியமாக கருதுகிறேன். இந்தப் படம் மூலம் ரசிக்கத்தக்க பொழுதுபோக்குப் படத்தைக் கொடுக்க ஆவலுடன் காத்திருக்கிறோம்" என்றார்.

# ஓடிடி–யில் தமன்னாவுக்கு அடித்த ஜாக்பாட் : ஹிட் சீரிஸில் வாய்ப்பு

**சென்னை : மார். 2,**

**அண்மைக்காலமாக சினிமாவைவிட ஓடிடி நாயகியாக ஜொலிக்கத் தொடங்கி இருக்கிறார் தமன்னா. இப்போது அவர் 'ஒடேலா2' ஹிட் சீரிஸில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். இந்தத் தகவலைப் படக்குழு அறிவித்துள்ளது.**

'லஸ்ட் ஸ்டோரிஸ் 2' வெற்றிக்குப் பிறகு நடிகை தமன்னா ஓடிடி நாயகியாக உருவெடுத்துள்ளார். அந்த சீரிஸில் கதைக்காக தனது காதலர் விஜய் வர்மாவுடன் இவர் காட்டிய தாராள நெருக்கம் ரசிகர்கள் மத்தியில் டிரெண்டானது. இதனால், பல ஹிட் சீரிஸ்கள் வாய்ப்பு தமன்னாவுக்கு குவிவதாக வட இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிடுகின்றன.

சினிமாவில் முன்னணி கதாநாயகிகளாக வலம் வரும்போது இதுபோன்று ஓடிடி சீரிஸ்களில் நடிக்க வாய்ப்பு வந்தால் படங்களுக்கு வாங்கும் சம்பளத்தை விட அதிக சம்பளம் நிர்ணயிக்கிறார்கள். இந்த டிரெண்டை தமன்னாவும் சரியாக புரிந்து கொண்டு கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறார்.



கடந்த 2022-ல் ஓடிடி-யில் வெளியான க்ரைம் த்ரில்லர் தொடர் 'ஒடேலா ரயில்வே ஸ்டேஷன்'. அசோக் தேஜா இயக்கத்தில் உருவான இந்த க்ரைம் த்ரில்லர் கதையை சம்பத் நந்தி எழுதினார். இப்போது அதன் சீக்வல் 'ஒடேலா 2' என்ற பெயரில் உருவாகிறது. இதில்தான் நடிகை தமன்னா நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். இதன் படப்பிடிப்பு நேற்று வாராணசியில் தொடங்கியது. படக்குழு இதுகுறித்து அதிகாரபூர்வமாக அறிவிப்பு வெளியிட்டுள்ளது.


இதன் சீக்வல் கதை கிராமம், அதன் வளமான கலாச்சாரம், பாரம்பரிய மரபுகள் மற்றும் அதன் உண்மையான மீட்பர் ஒடேலா மல்லண்ண சுவாமி தனது கிராமத்தை தீய சக்திகளிடமிருந்து எப்போதும் எவ்வாறு பாதுகாக்கிறார் என்பதை மையமாகக் கொண்டுள்ளது.

# ஆண்களின் ஆயுதம் பெண்களை இழிவுப்படுத்துவது தான் : நடிகை குஷ்பு தாக்கு

**சென்னை : மார். 2,**

**பெண்களை இழிவுப்படுத்தி பேசுவதுதான் ஆண்களின் மிகப்பெரிய ஆயுதம் என நடிகை குஷ்பு பேசியுள்ளார். மேலும், இப்படி இழிவுப்படுத்திதான் ஆண்கள் தங்களை நிரூபிக்க நினைக்கிறார்கள் என்றும் கூறியுள்ளார்.**

தேசிய மகளிர் ஆணைய உறுப்பினராக இருக்கும் குஷ்பு, "இங்கு பெண்களும், ஆண்களும் சமம். ஆனால், அந்த சம உரிமை மறுக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறது. உன்னால் தனியாக என்ன சாதித்து விட முடியும் என்று என் அப்பாவே என்னிடம் கேட்டார். அவர் மட்டுமல்ல, பெரும்பாலான ஆண்களுக்கும் இதே



மனநிலைதான்.

இன்றும் வக்கிர புத்தியோடு பல ஆண்கள் இருப்பதை பார்க்க முடிகிறது. அவர்கள் பெண்களை இழிவுப்படுத்திப் பேசுவதை தங்கள் ஆயுதமாக பார்க்கிறார்கள். இதன் மூலம் தங்களை நிரூபித்துக் கொள்ள முடியும் என நம்புகிறார்கள். இது எவ்வளவு பெரிய வேடிக்கை! என் தந்தையே என்னிடம் தவறாக நடக்க முயன்றார். அவர் இப்போது உயிரோடு இருக்கிறாரா இல்லையா என்பது கூட எனக்குத் தெரியாது. அதுபற்றிய அக்கறையும் எனக்கில்லை.

பெண்கள் தங்களுக்கு நடக்கும் பிரச்சினைகளை தைரியமாக வெளியில் சொல்ல வேண்டும் என்பதுதான் என் வேண்டுகோள். ஆண்களைப் பற்றி இப்படி நான் சொல்வதால் ஆண்கள் மாறவே இல்லை என்பது அர்த்தம் இல்லை. நம்மைச் சுற்றி நல்லவர்களும் இருக்கிறார்கள்!" என்று பேசியுள்ளார்.

வரலாறு உலகம்

# வங்கதேச தலைநகர் டாக்காவில் வணிக வளாகத்தில்
## பயங்கர தீ விபத்து : 43 பேர் பலி, பலர் படுகாயம்



**டாக்கா : மார். 2,**

**வங்கதேசத்தில் 6 தளங்கள் கொண்ட வணிக வளாகத்தில் ஏற்பட்ட தீவிபத்தில் 43 பேர் பலியாகினர். பலர் படுகாயங்களுடன் உயிருக்குப் போராடி வருகின்றனர்.**

வங்கதேச தலைநகர் டாக்காவில் 6 தளங்கள் கொண்ட வணிக வளாகம் ஒன்றில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பின்னிரவு தீவிபத்து ஏற்பட்டது. இதில் 40க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். பலர் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சையில் உள்ளனர்.

விபத்துகுறித்து அந்நாட்டு சுகாதார அமைச்சர் டாக்டர் சமந்தா லால் சென் இன்று காலை செய்தியாளர்களை சந்தித்துப் பேசினார். அப்போது அவர், அந்தக் கட்டிடத்தில் உள்ள உணவகம் ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. அது மளமளவென அடுத்தடுத்த தளங்களுக்கும் பரவியது. மேல் தளங்களிலும் உணவகங்கள், துணிக் கடைகள் இருந்தன. இதனால் தீ இன்னும் எளிதாகப் பற்றிப் பரவியது.

13 தீயணைப்பு வாகனங்கள் தீயை அணைக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டன. கடுமையான போராட்டங்களுக்கு மத்தியில் தீயணைப்பு வீரர்கள் 75 பேரை வெளியேற்றினர், இவர்கள் 42 பேர் மயங்கிய நிலையில் இருந்தனர். டாக்கா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 33 பேர் இறந்தனர். 10 பேர் அருகிலுள்ள ஷேக் ஹசினா தேசிய தீக்காய சிகிச்சை மையத்தில் உயிரிழந்தனர். 22 பேர் தீவிர தீக்காயங்களுக்கான சிகிச்சைபெற்றுவருகின்றனர். காயமடைந்தவர்கள் தீவிர சுவாசக் கோளாறும் ஏற்பட்டுள்ளது." என்றார். அமைச்சரும் தீக்காய சிகிச்சை நிபுணர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த விபத்தில் மேலும் உயிரிழப்பு அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது. சடலங்கள் பல அடையாளம் காண இயலாத அளவுக்கு எரிந்துள்ளதாகவும் மருத்துவர்கள் கூறினர்.

உள்ளூர்வாசிகள் விபத்து குறித்து கூறுகையில், "அந்தக் கட்டிடம் மிகவும் ஆபத்தானதாகவே கருதப்பட்டது. ஒவ்வொரு தளத்திலும் காஸ் சிலிண்டர்கள் உண்டு. படிகளில் கூட சிலிண்டர்கள் அடுக்கி வைத்திருப்பார்கள். அதனால் அது ஆபத்தான கட்டிடமாகவே இருந்தது" என்றனர். விபத்துக்கான காரணம் இன்னும் உறுதிப்படுத்தப்படாத நிலையில் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த தீவிபத்து டாக்கா மக்கள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# காசாவில் நிவாரணப் பொருட்கள் வாங்க காத்திருந்த மக்கள் மீது
## இஸ்ரேல் ராணுவம் துப்பாக்கிச்சூட்டில் 104 பேர் பலி



**பாலஸ்தீனம் : மார். 2,**

**இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போர் 4 மாதங்களுக்கும் மேலாக நீடித்து வருகிறது. இந்த போரில் காசாவில் மட்டும் இதுவரை 30 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பலியாகி உள்ளனர். பல்லாயிரக்கணக்கானோர் படுகாயம் அடைந்துள்ளனர். மேலும் லட்சக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.**

இஸ்ரேலுக்கு நாளுக்கு நாள் தாக்குதலை தீவிரப்படுத்தி வருவதால் காசாவில் உயிரிழப்பு மற்றும் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை நிமிடத்துக்கு நிமிடம் அதிகரித்து வருகிறது. இதனிடையே போரின் விளைவால் காசா மக்கள் தொகையில் கால்வாசி பேர் பஞ்சத்தின் விளிம்பில் இருப்பதாகவும், பல லட்சம் மக்கள் ஒரு வேளை உணவு கூட கிடைக்காமல் பரிதவித்து வருவதாகவும் ஐ.நா. கவலை தெரிவித்தது.

இதனால் குறைவான அளவில் கிடைக்கும் நிவாரண பொருட்களை பெற மக்கள் முண்டியடிப்பதாகவும், ஒரு சில இடங்களில் மக்கள் நிவாரண பொருட்களை கொள்ளையடித்து செல்வதாகவும் தகவல்கள் வெளியாகின. இந்த நிலையில் காசாவின் மேற்கு பகுதியில் உள்ள நபுல்சி ரவுண்டாபவுட் என்ற இடத்திற்கு உணவு மற்றும் நிவாரண பொருட்கள் வருவதாக வந்த தகவலின் பேரில் அவற்றை வாங்குவதற்காக ஏராளமான பொதுமக்கள் திரண்டிருந்தனர்.

நிவாரண பொருட்களை கொண்டு வரும் லாரிகளை அவர்கள் ஆர்வத்துடன் எதிர்பார்த்துக கொண்டிருந்தனர். நிவாரணப் பொருட்கள் வந்த லாரிகளுடன் இஸ்ரேல் ராணுவ வந்தன. லாரி அப்பகுதிக்கு வந்ததும், மக்கள் லாரியை முற்றுகையிட்டு பொருட்களை வாங்க முண்டியடித்தனர். அப்போது கூட்ட நெரிசலில் சிலர் சிக்கி காயம் அடைந்ததாக தெரிகிறது.

இதனால் இஸ்ரேல் ராணுவம் கூட்டத்தை கட்டுப்படுத்த முயற்சி மேற்கொண்டதாக தெரிகிறது. அப்போது இஸ்ரேல் ராணுவம் திடீரென மக்களை நோக்கி துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளது. இதில் 104 பேர் பரிதாபமாக உயிரிழந்ததுள்ளனர். 700-க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர்.

துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதை உறுதி செய்த இஸ்ரேல் ராணுவம் "நிவாரணப் பொருட்கள் வாங்குவதற்கான மக்கள் முண்டியடித்தனர். அப்போது அருகில் இருந்து இஸ்ரேல் ராணுவ வாகனத்தை நோக்கி வந்தனர். அவர்கள் ராணுவ வீரர்களுக்கு அச்சுறுத்தும் விடுப்பதாக நம்பப்பட்டது. இதனால் தங்களை காப்பாற்ற துப்பாக்கிச்சூடு நடத்தினர்" எனத் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே காசாவில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கான உபகரணங்கள் இன்றி தள்ளாடி வரும் நிலையில் தற்போதைய இந்த கொடூர சம்பவத்தால் காயம் அடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. வாகனங்கள் செல்ல முடியாத நிலையில், கழுதை வண்டியில் பலியானவர்களின் உடல்கள் கொண்டு செல்லப்படும் பரிதாப நிலையை காண முடிந்தது.

இதற்கிடையே அமெரிக்கா, துருக்கி உள்ளிட்ட நாடுகள் உடனடி போர் நிறுத்தம் தேவை. பிணைக்கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர். ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். காசாவில் பாலஸ்தீன சுகாதார அமைச்சகம் இது ஒரு படுகொலை என தனது கண்டனத்தை தெரிவித்துள்ளது.

# "ஜனநாயகத்தை அழிக்கும் சக்திகள் வலுப்பெறுகின்றன" – ரிஷி சுனக் எச்சரிக்கை



**பிரிட்டன் : மார். 2,**

**கடந்த 2023 அக்டோபர் 7 அன்று தெற்கு இஸ்ரேல் பகுதியில் பாலஸ்தீன ஹமாஸ் பயங்கரவாதிகள் நடத்திய திடீர் தாக்குதலில் 1500க்கும் மேற்பட்ட இஸ்ரேலியர்களை கொன்றனர். மேலும், ஹமாஸ் அமைப்பினர், பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட 250க்கும் மேற்பட்ட இஸ்ரேலியர்களை பிணைக்கைதிகளாக பிடித்துச் சென்றனர்.**

இந்த பயங்கரவாத நடவடிக்கையில் ஆத்திரமடைந்த இஸ்ரேல், ஹமாஸ் அமைப்பை முற்றிலும் ஒழிக்கப் போவதாக உறுதியெடுத்து அவர்கள் மறைந்திருக்கும் பாலஸ்தீன காசா பகுதியில் வான்வழியாகவும், தரைவழியாகவும் தாக்குதல் நடத்தி வருகிறது. இதில் ஏராளமான பாலஸ்தீன பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

4 மாதங்களை கடந்தும் தீவிரமாக போர் நடைபெற்று வரும்நிலையில், உலகெங்கும் ஹமாஸ் அமைப்பினருக்கும், இஸ்ரேலிய ராணுவ படையினருக்கும் ஆதரவாக பல்வேறு அரசியல் தலைவர்களும், பொது மக்களும் ஆதரவு தெரிவித்து வருகின்றனர். இங்கிலாந்தில், பொதுமக்களில் சிலர் பாராளுமன்ற உறுப்பினர்கள் எடுக்கும் ஆதரவு நிலைப்பாட்டிற்கு எதிராக அவர்களது இல்லங்களுக்கு முன் போராட்டங்களில் ஈடுபடுகின்றனர்.

இது அந்நாட்டில் இதுவரை காணாத நடைமுறையாக உள்ளது. இந்நிலையில், பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் இரு தரப்பினரில் எவருக்கு ஆதரவு குரல் அளித்தாலும், மற்றொரு தரப்பினர் அச்சுறுத்துவதாக தெரிவித்தனர். ஆதரவு நிலை எடுப்பவர்களை நேரிடையாக குறிப்பிட்டு எச்சரிக்கைகள் விடப்படுவதாகவும், உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளதாகவும் தெரிவித்தனர்.

இது குறித்து இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக் தெரிவித்ததாவது: சமீப காலங்களாக, கும்பல் ஆட்சி ஜனநாயகத்தை அழிக்க முயல்வதை அனைவரும் ஏற்று கொள்கிறோம். இது சரியல்ல. கருத்து சுதந்திரத்தையும், ஆரோக்கியமான விவாதத்தையும் தடுக்கும் வகையில் அதிகரித்து வரும் வன்முறையுடன் கூடிய அச்சுறுத்தும் நடைமுறை வளர்ந்து வருகிறது. இது இந்நாள் வரை இங்கிலாந்தில் காணப்பட்ட ஜனநாயக வழிமுறையே அல்ல. நாம் அனைவரும் ஒற்றுமையாக இணைந்து இந்த சூழலை மாற்ற வேண்டும்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் இல்லங்களுக்கு முன் போராட்டங்கள் நடைபெறுவதை தடுக்க ரோந்து படையினர் அதிகரிக்கப்படுவார்கள். உறுப்பினர்களின் இல்லத்திற்கு முன் போராடுவது சட்ட விரோத அச்சுறுத்தலாக கருதப்படும் என்று ரிஷி சுனக் கூறினார். பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பிற்காக $39 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சர் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

# குர்துவாரா வாசலில் சீக்கியர் படுகொலை
## வெறுப்புணர்வு காரணமா என விசாரணை




**அமெரிக்கா : மார். 2,**

**அமெரிக்காவின் தென்கிழக்கில் உள்ள மாநிலம் அலபாமா. இதன் தலைநகரம் மோன்ட்கோமரி.**

இந்தியாவின் உத்தர பிரதேச மாநிலத்தின் பிஜ்னோர் மாவட்ட டண்டா சகுவாலா கிராமத்தை சேர்ந்த "கோல்டி" என அழைக்கப்படும் 29 வயதான ராஜ் சிங் சுமார் ஒன்றரை வருட காலமாக அமெரிக்காவில் தங்கியிருந்தார்.

"கீர்த்தன்" எனப்படும் சீக்கிய மதத்தின் பக்தி பாடல்கள் பாடுவதில் திறன் மிக்கவரான ராஜ் சிங், அலபாமா மாவட்டத்தில் உள்ள ஒரு குர்துவாரா எனப்படும் சீக்கிய வழிபாட்டு தலத்திற்கு வெளியே நின்றிருந்தார். அப்போது அங்கு வந்த அடையாளம் தெரியாத சிலர், ராஜ் சிங்கை சுட்டனர். இதில் துப்பாக்கி குண்டு அவரது வயிற்று பகுதியில் பாய்ந்ததில் அவர் அங்கேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

ஒரு சில இனத்தவர்கள் மீது வெறுப்புணர்வினால் வேறு சில இனத்தவர்கள் தாக்குதலிலோ அல்லது வன்முறை செயலிலோ ஈடுபடும் வெறுப்புணர்வு குற்றம் எனும் வகையிலான குற்றமாக இது இருக்கலாம் என ராஜ் சிங் குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர். இப்பிராந்தியத்தில் இந்திய வம்சாவளியை சேர்ந்தவர் மீது நடத்தப்படும் இரண்டாவது கொலை சம்பவம் இது.

மேலும், அமெரிக்காவில், 2024 பிப்ரவரியிலும், 2023 ஜூலையிலும் இந்திய வம்சாவளியினர் மீது வெறுப்புணர்வு கொண்ட தனி நபர்களால் வெவ்வேறு சம்பவங்களில் இருவர் சுட்டு கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. உயிரிழந்த ராஜ் சிங்கின் உடலை இந்தியாவிற்கு கொண்டு வர உதவி செய்ய கோரி, பிரதமர் நரேந்திர மோடிக்கு அவரது குடும்பத்தினர் கடிதம் எழுதியுள்ளனர்.

தனது தந்தையின் உயிரிழப்பிற்கு பிறகு தனது தாயையும் இரண்டு சகோதரிகளையும் ஒரு சகோதரனையும் காப்பாற்றும் பொறுப்பில் இருந்த ராஜ் சிங் கொல்லப்பட்டது அவரது சொந்த ஊரில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# காசா போரில் பலியான பாலஸ்தீனியர் எண்ணிக்கை
## 30,035 ஆனது : சுகாதார அமைச்சகம் அதிகாரபூர்வ தகவல்



**காசா : மார். 2,**

**காசா மீதான இஸ்ரேலின் தாக்குதலில், அங்கு கொல்லப்பட்ட பாலஸ்தீனியர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்தை கடந்துள்ளதாக, காசா சுகாதார அமைச்சகம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.**

சமகாலத்தில் அரங்கேறி வரும் கொடூர போராக, காசா மீதான இஸ்ரேலின் ராணுவத் தாக்குதல் நிலை கொண்டுள்ளது. போர் தொடங்கி அதன் 5 மாதங்களை அடுத்த வாரம் நிறைவு செய்யவுள்ள சூழலில், இஸ்ரேல்-ஹமாஸ் போரில் இதுவரை 30,000 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டதாக காசா சுகாதார அமைச்சகம் அதிகாரபூர்வமாக தெரிவித்துள்ளது.

இஸ்ரேல்-பாலஸ்தீன மோதலின் வரலாற்றில் மிகக் கொடியவன்முறைசம்பவமாக, ஹமாஸ் போராளிகள் அக்டோபர் 7 அன்று தெற்கு இஸ்ரேலுக்குள் நுழைந்து 1,200 பேரைக் கொன்றது பதிவாகி உள்ளது. பெருமளவிலான அந்த பொதுமக்கள் படுகொலையைத் தொடர்ந்து 250 பணயக்கைதிகளை கடத்திக்கொண்டு காசா திரும்பியது ஹமாஸ் ஆயுதக் குழு. இதனால் வெகுண்டெழுந்த இஸ்ரேல் ஹமாஸை பூண்டோடு அழிக்கும்வரை ஓயமாட்டோம் என காசா மீது தொடுத்த தாக்குதல் தற்போது வரை தொடர்ந்து வருகிறது.

2.3 மில்லியன் பாலஸ்தீனியர்களைக் கொண்ட காசாவின் மக்கள்தொகையில் 80 சதவீதத்தினர் போர் காரணமாக தங்கள் வாழிடத்திலிருந்து விரட்டப்பட்டார்கள். அப்படி இடம்பெயராது அங்கேயே இருந்தவர்கள், இஸ்ரேலின் தாக்குதலில் பலியானது போக, பட்டினி மற்றும் நோய் தொற்று காரணமாக இறந்து வருகின்றனர். இந்த மரணங்களுக்கு மத்தியில், காசா மீதான இஸ்ரேலின் போர் தொடங்கியதில் இருந்து இதுவரை 30,035 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும், 70,457 பேர் காயமடைந்துள்ளதாகவும் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஹமாஸ் நடத்தும் அரசாங்கத்தின் ஒரு பகுதியாக செயல்படும் காஸாவின் சுகாதார அமைச்சகம், உயிரிழப்புகள் பற்றிய விரிவான பதிவுகளை பராமரித்து வருகிறது. ஐ.நா அமைப்பு, சுயாதீன வல்லுநர்கள் மற்றும் இஸ்ரேலின் சொந்த எண்ணிக்கைகளுடன் இவை பெரும்பாலும் பொருந்தி வருகின்றன.

சுகாதார அமைச்சகத்தின் இந்த எண்ணிக்கையில் சிவிலியன்கள் மற்றும் போராளிகள் என்று வேறுபடுத்தவில்லை, ஆனால் கொல்லப்பட்டவர்களில் மூன்றில் இரு பங்கு பெண்கள் மற்றும் குழந்தைகள் என்று தெரியவருகிறது. மீட்கமுடியாத அளவுக்கு இடிபாடுகளுக்கு அடியில் புதைந்த உடல்கள் காரணமாக, பலியானோரின் உண்மையான எண்ணிக்கை சற்று அதிகமாக இருக்கக்கூடும் என்றே சுகாதார அமைச்சகம் தெரிவிக்கிறது.

எகிப்து, கத்தார் உள்ளிட்ட மத்தியஸ்த நாடுகளின் உதவியால் அண்மையில், முன்வைக்கப்பட்ட போர் இடைநிறுத்த ஏற்பாட்டுக்கு ஹமாஸ் இறங்கி வந்த நிலையில், ஹமாஸின் நிபந்தனைகளுக்கு இஸ்ரேல் உடன்பட மறுத்தது. இதனால் போர் நிறுத்தத்துக்கான வாய்ப்புகள் குறைந்து, தாக்குதல் நடவடிக்கைகள் மீண்டும் வேகம் பிடித்துள்ளன. இதன் காரணமாக பலியாவோர் எண்ணிக்கை வரும் நாட்களில் மேலும் அதிகரிக்க வாய்ப்பாகும் என்றும் அஞ்சப்படுகிறது.

# உலகளவில் 100 கோடிக்கும் அதிகமானோர்
## உடல் பருமனால் பாதிப்பு – லான்செட் ஆய்வில் தகவல்



**லண்டன் : மார். 2,**


**ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக உடல் பருமன் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

உலகளவில் உடல் பருமனால் வாழும் குழந்தைகள், இளம் பருவத்தினர் மற்றும் பெரியவர்களின் மொத்த எண்ணிக்கை 100 கோடியை தாண்டியுள்ளது என்று தி லான்செட் வெளியிட்டுள்ள ஆய்வுத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக உடல் பருமன் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரியவர்களில், உடல் பருமன் விகிதம் பெண்களில் இருமடங்காகவும், ஆண்களில் கிட்டத்தட்ட மூன்றுமடங்காகவும் உள்ளது. கடந்த 1990 முதல் 2022 வரையிலான காலகட்டத்தில் ஆண் குழந்தைகள் மற்றும் பெண் குழந்தைகளின் உடல் பருமன் விகிதம் நான்கு மடங்கு அதிகமாக உள்ளது, கிட்டத்தட்ட எல்லா நாடுகளிலும் அதிகரித்து காணப்படுகிறது, என்று ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

எடை குறைந்த பெண் குழந்தைகளின் விகிதம் 1990ல் 10.3 சதவீதத்தில் இருந்து 2022ல் 8.2 சதவீதமாகவும், ஆண் குழந்தைகளில் 16.7 சதவீதத்தில் இருந்து 10.8 சதவீதமாக குறைந்துள்ளதாகவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். பி.எம்.ஐ. கணக்கீடு மூலம் 1990 முதல் 2022 வரையில் உடல் பருமன் விகிதத்தில் நிகழ்ந்துள்ள மாற்றம் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. உலகம் முழுவதும் சுமார் 190 நாடுகளில் சுமார் 1,500 ஆய்வாளர்கள் இந்த பணியை மேற்கொண்டுள்ளனர்.

# பாலஸ்தீன ஆதரவு பிரச்சாரத்தின் மூலம் நாடாளுமன்ற
## இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அரசியல்வாதி



**லண்டன் : மார். 2,**

**இடைத்தேர்தலில் 39.7 சதவீத வாக்குகள் பெற்று ஜார்ஜ் காலோவே வெற்றி பெற்றார்.**


இங்கிலாந்து நாடாளுமன்றத்தின் கீழவையில் உள்ள ரோச்டேல் தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் இங்கிலாந்து அரசியல்வாதியான ஜார்ஜ் காலோவே, அமோக வெற்றியைப் பெற்றுள்ளார். தொழிலாளர் கட்சியில் தனது அரசியல் வாழ்க்கையைத் தொடங்கிய காலோவே, ஈராக் போரில் அப்போதைய இங்கிலாந்து பிரதமர் டோனி பிளேயரின் நிலைப்பாட்டை விமர்சித்ததற்காக 2003-ல் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார். பின்னர் 2019-ல் தனது சொந்த தொழிலாளர்கள் கட்சியை நிறுவினார்.

இந்த நிலையில் ரோச்டேல் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினரான தொழிலாளர் கட்சியைச் சேர்ந்த டோனி லாய்டு கடந்த ஜனவரி மாதம் உயிரிழந்தார். இதையடுத்து அந்த தொகுதியில் இடைத்தேர்தல் நடைபெற்றது. இந்த இடைத்தேர்தலில் காலோவே போட்டியிட்டார்.

அவர் தேர்தல் பிரச்சாரத்தின்போது, காசா பகுதியில் நடந்து வரும் மோதல்கள் குறித்து தீவிரமாக பேசினார். இஸ்ரேலிய இராணுவ நடவடிக்கைகளை கண்டித்தார். இந்த சம்பவத்தை இங்கிலாந்து அரசியல் தலைவர்கள் கையாண்டதை விமர்சித்தார். இதன் காரணமாக ரோச்டேலின் மக்கள்தொகையில் மூன்றில் ஒரு பங்கு உள்ள முஸ்லீம் வாக்காளர்களிடையே அவருக்கு ஆதரவு கிடைத்தது.

இதன் மூலம் இடைத்தேர்தலில் ஜார்ஜ் காலோவே, 39.7 சதவீத வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். அவரை எதிர்த்து போட்டியிட்டவர்களில் முக்கிய வேட்பாளரான டேவிட் டுல்லி 21.3 சதவீத வாக்குகளைப் பெற்றார். இந்த நிலையில் வெற்றிக்குப் பிறகு உரையாற்றிய காலோவே தொழிலாளர் கட்சியின் தலைவர் கெய்ம் ஸ்டார்மரைப் பார்த்து, "இது காசாவுக்கானது. நீங்கள் விலை செலுத்தியுள்ளீர்கள். மேலும், ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனத்திலும், காசா பகுதியிலும் தற்பொழுது நடக்கும் பேரழிவை செயல்படுத்துவதிலும், ஊக்குவிப்பதிலும், மறைப்பதிலும் நீங்கள் ஆற்றிய பங்கிற்கு அதிக விலை கொடுப்பீர்கள்" என்று கூறினார்.

# மெர்சிடிஸ் உரிமையாளரின் பிடிவாதத்திற்கு பதிலளித்த
## பிஎம்டபிள்யூ – டிரெண்டாகும் வீடியோ




**ஜெர்மன் : மார். 2,**

**சமூக வலைதளங்களில் சுவாரஸ்யமான நிகழ்வுகள் பல "டிரெண்டிங்" ஆகி பிரபலமாக உள்ளன.**

அவ்வகையில் சில மாதங்களாக, தாங்கள் பதிவிடும் வீடியோக்களை சில பிரபலங்கள் அல்லது பிரபல நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளின் பெயர்களை குறிப்பிட்டு அவர்கள் "கமென்ட்" செய்தாக வேண்டும் எனும் பிடிவாதக்காரர்களின் வீடியோ பரவி வருகிறது.

இன்ஸ்டாகிராம் சமூக வலைதளத்தில் "டுத்லெஸ். ஏஎம்ஜி" எனும் ஐடி-யை கொண்ட ஒரு பயனர், தான் வைத்திருக்கும் மெர்சிடிஸ்-ஏஎம்ஜி காரை குறித்து பதிவிட்டுள்ள வீடியோவை பிஎம்டபிள்யூ நிறுவனம் பார்த்து, கமென்ட் பதிவிட்டால், தனது மெர்சிடிஸ் காரை விற்று விட்டு பிஎம்டபிள்யூ எம்340ஐ ரக காரை வாங்குவேன் என பதிவிட்டிருந்தார்.

இதற்கு பதிலளித்த பிஎம்டபிள்யூ நிர்வாகம் "நீங்கள் உங்கள் இன்ஸ்டாகிராம் ஹேண்டில் பெயரையும் மாற்றி பிஎம்டபிள்யூ_சுகமான டிரைவிங் என மாற்றுவீர்களா?" என கேள்வி எழுப்பியிருந்தது. மிக பெரிய கார் நிறுவனமான பிஎம்டபிள்யூ ஒரு பயனரின் வீடியோவிற்கு உடனடியாக பதிலளித்தது இணையத்தில் பாராட்டப்படுகிறது.

ஆனால், பிஎம்டபிள்யூ நிறுவனம் பதிலளித்ததனால், அந்த பயனர் வாக்களித்தபடி தனது மெர்சிடிஸ் காரை விற்று பிஎம்டபிள்யூ காரை வாங்கினாரா எனும் விவரம் தற்போது வரை வெளியாகவில்லை. இந்த கேள்வி-பதில் குறித்த வீடியோ இணையத்தில் வைரலாக பரவி வருகிறது.

# கனடா முன்னாள் பிரதமர் பிரையன் முல்ரோனி
## வயது மூப்பு காரணமாக காலமானார்



**கனடா : மார். 2,**

**கனடா முன்னாள் பிரதமர் பிரையன் முல்ரோனி (84) வயது மூப்பு காரணமாக காலமானார்.**

பிரையன் முல்ரோனி அரசியல்வாதி ஆவார், இவர் கனடாவின் முற்போக்கு கன்சர்வேடிவ் கட்சியின் தலைவராக பணியாற்றினார். 1984 முதல் 1993 வரை கனடாவின் பிரதமராக இருந்தார். கியூபெக் நகரின் வடகிழக்கில் காகிதம் மற்றும் கூழ் நகரத்தில் ஒரு எலக்ட்ரீஷியனின் மகனாகப் பிறந்த முல்ரோனி ஆங்கிலம் மற்றும் பிரஞ்சு ஆகிய இருமொழிகளில் வளர்ந்தார்.

நிறவெறிக்கு எதிராக உலக நாடுகளை திரட்டி தீவிர போராட்டம் நடத்தியவர் நடத்தினார். பிரதம மந்திரியாக, முல்ரோனி, வர்த்தகக் கொள்கைகள் மற்றும் வட அமெரிக்காவில் அமில மழையைச் சமாளிப்பதற்கான நடவடிக்கைகள் போன்ற இருதரப்பு விஷயங்களில் அமெரிக்காவுடன் நெருக்கமான ஒத்துழைப்பை நாடினார். இந்நிலையில் கனடா முன்னாள் பிரதமர் பிரையன் முல்ரோனி (84) வயது மூப்பு காரணமாக உயிரிழந்தார்.

# பெங்களூரு 'ராமேஸ்வரம் கஃபே'யில் நிகழ்ந்தது குண்டுவெடிப்புதான்: கர்நாடக முதல்வர்





# மக்களவைத் தேர்தலுக்கான பாஜக முதல்கட்ட வேட்பாளர்கள் பட்டியல் : பிரதமர் ஆலோசனை

# பணிப்பெண் சித்ரவதை செய்த வழக்கில் திமுக எம்எல்ஏ மகன், மருமகளுக்கு நிபந்தனை ஜாமீன்




| சென்னை / புதுக்கோட்டை | 02.03.2024 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

02.03.2024 சனி

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

ரா. பி. சேதுப்பிள்ளை , தமிழறிஞர் (பி.1896) (இ.1961)



அழகிரி விசுவநாதன் , தமிழக எழுத்தாளர் (பி.1931)



தினேஷ் குணவர்தன , இலங்கை அரசியல்வாதி (பி.1949)



## இன்றைய நினைவு நாள்


தோட்டக்காடு ராமகிருஷ்ண பிள்ளை , தமிழக எழுத்தாளர் (பி.1854) (இ.1920)



சரோஜினி நாயுடு , இந்தியாவின் முதல் பெண் ஆளுநர் (பி.1879) (இ.1949)



ரஞ்சன் விஜேரத்ன , இலங்கை அரசியல்வாதி (பி.1931) (இ.1991)



## வான்படை நாள் (இலங்கை)